மலர்ந்ததாமரைப்போல்முகமும் வாடியொடுங்கிச்செவிதாழும்
முலையின்பாலும்உண்ணாது மூச்சுவாங்கும்இதுதீர
பலருஞ்சொன்னார்என்னாமல் பழிச்சேதன்றுக்கேட்டிடுமே, (௧௨௮)

காலுங்கையுமிகவற்றிக் கட்டிப்போட்டால்போல்பிள்ளை
வேலும்வற்றிவெளுப்பிட்டு வேறேகுணமாய்குரல்நெறித்து
சாலமுலைப்பால்குடித்தாலுஞ் சற்றுந்தேறுதிருப்பதெனில்
நீலவட்டமுலைமாதே நிசமாய் தேரைத்தோஷமிதே, (௧௨௯)

தேரைதோஷத்துக்குமருந்து-ஆசிரியவிருத்தம்,

புள்ளடிச்சிறுகிளைநீராரை தன்னுடன் புகழ்காணி நீர்முள்ளியும்,
பொய்யாமல்இவ்வகை சமூலமுடனேகளா புனமல்லிக் குமிள்நீலியும்
மொள்ளவருகரிசலாங்கண்ணியுடனே முடக்கொத்தானு வேர்சமனதா
ய்-மூன்நாழிநீர்தனைநாலிலொன்றாகவேமுதல்பாகமாயிறக்கி மெள்ளஅ
திமதூரமும் திப்பிலியேலேலம்மிளகுவகைக்கால்பலமதாய் மென்பசு
ம்பால்விட்டரைத்துக்கலந்துமேயிருநாழி நெய்யினுடனே-உள்ளபடிந
ன்றாய்எரித்ததைவடித்துபின் உரைத்திடு நாண்டியளவாய் - உண்டிடக்
குளிதோஷந்தேரையின்தோஷமுடன் ஓடியேபோய்விடுமே. (௱௯௰)

சகலதோஷநிவர்த்தி - தன்வந்திரி

எண்சீராசிரியவிருத்தம்,

நிமையானதோஷசர்வாங்கமெல்லாம் நிலைமைப்போதில்நீறுநற்கு
மூலஞ்சொல்வேன்,வமையான-வ-ன ம-ப-என்றுதானேவங்-சிங்என்
றுசிவ-சி-வ-ய-ந-மஎன்ன, துமையானதோஷநிவர்த்தித்தானுச்சசொ
ல்லவும்போகுமோசூட்சாசூட்சம்-கமையானதோஷநிவர்த்தித்தன்னை
லேகவலைநீக்கிக்காட்சிப் பெறுவாய்தானே. (௱௯௧)

சகலதோஷத்துக்குங்குளிசம்.

கீழ்க்காயிநெல்லிவேர்முடக்கொத்தான்வேர் கிருபையுள்ளநாயுரு
விகஞ்சாங்கோரை, தாழ்க்காயின்விடத்தலைவேர்நிலக்கடம்பு தழைத்த
சிறுபுளடிபோச்சுரையின்வேரும் கேழ்க்காயின் எட்டுவிதவேருவாங்
கிக்குளிசமிட்டுக் குழைந்தைக்குந் தாய்க்குங்கட்ட - ஊழ்க்கான சகல
தோஷங்களெல்லாம் ஓடிகடலிற்புக்கும் உண்மைதானே. (௱௯௨)

தோஷங்களுக்கெல்லாம் மாத்திரை

எண்சீராசிரியவிருத்தம்.

அதிமதூரம் மரமஞ்சள் முத்தக்காசு அதிவிடையம் வசம்பு கடு
க்காயும்நல்ல, புதிதேவதாரமெல்லாஞ் சமனாய்சேர்த்துப் போடுதலை
ச்சாற் விட்டரைத்துக் குன்றிப்போல கதிபெறவேயுண்டைசெய்து
முலைப்பால்தேனில் கருணையுடனேகொடுக்க மதலைகட்கு, சதியான
தோஷமெல்லாம்பறந்துஓடிசமுத்திரத்திற்புக்குமெனச்சாற்றினுமே

சகலதோஷத்துக்கும் துவாலைகைகாவிற்கட்டமருந்து

அறுசீராசிரியவிருத்தம்.

வகுக்குந்துவாலைதனைக்கேளு மானேசின்னிவிளாநொச்சில்
பகுக்குஞ்சிந்தில்தான்வேம்பு பையநறுக்கிவசம்புள்ளி
தொகுக்கத்துவளைத்தனையிடித்துத் துவாலைகண்டக்கால்தன்னில்
மிகுக்கமுடிந்துக்கட்டிடவே விரைந்துதோஷம்போய்விடுமே. (௱௯௩)

திரிதோஷகுணம் அறுசீராசிரியவிருத்தம்.

செய்யகண்ணுமிகச்சொருகு சீதந்தண்ணீராய்கழியும்
மையமேனிக்கருப்பாகும் மாங்காரிப்போலஆசனமாம்
வையதேகம்மிகஇளைக்கும் பொனம்போலவயிறுருகும்
செய்யதோஷமிதுதானே திரிதோஷமென்று நானுரையே. (க௱ரு)

சேயினுடம்புமிகநாறுஞ் செல்லாமுலைப்பால்அருந்தும்
காயுமுடம்புகண்குழியும்கண்டால்இதுதான்அறியாயோ
தேயுமுடையாய்சிவனுணை ந் திரித்தோஷமென்றேதான்
ஆயாவேதத்தளவுகண்ட அகத்தியனார் அருளினரே, (க௱சு)

தோஷவகுப்பு முற்றிற்று.

அகத்தியர்திருவடிகளே சரணம்.



மாந்தவகுப்பு.

மாந்தம்வருமாறுகூறுகின்றார்.

அன்னமுப்பாலுநெய்யும் அழுகியபழமுந்தேய்கால்
பின்னையுங்கடலைவெல்லம் பெரியமோர்க்குதவிப்பண்டும்
தின்றுமோர்க்காலந்தன்னில் தீயெனவெதுப்புமாகில்
ஒண்ணில்லாபிள்ளைக்குத்தான் உகந்துமேமாந்தமுண்டாம் (க௱எ)

அன்னப்பால்மலக்கட்டாகி அதன்வுடல்கனத்துந்தோன்றி
தின்னத்தால்வாயுபண்டந் தின்றதனுமேமாந்தம்
பின்பேதான்மயிர்க்குச்சிட்டுப் பிள்ளைக்குவெதுப்புக்காணும்
மின்னொத்தஇடையாய்கேளாய் மிகுந்திடுங்கழிச்சல்தானே. (க௱அ)

மாதாவயிற்றின்மாந்தமுலைப்பாலே யருந்திவருமாந்தம்
ஆதாரம்பைத்தெங்கிளநீர்சுரபி மாங்கிஷங்கனிகவிச்சு
பேதாமலைத்துவரைக்கடலைப் பேசுமொச்சைப்புளியங்கொட்டை
மாதாகொள்ளில்பிள்ளைக்கு வருங்காண்மாந்தப்பாதே. (க௱கூ)

தன்வந்திரி.

எந்தநோயும்வருவிதந்தான் இனித்தவெல்லமுந்தேங்காய்
சொந்தஉண்டைஉருளையுடன் துள்ளுவாளைவாய்மெகண்டை
சந்தமேதிப்பால்இறைச்சி சருகுத்தண்ணீர்புளிமோர்தான்
வந்துபாகல்சுரைக்கதலி வருதுமாந்தமிவைதின்றால். (க௱௰)

மாந்தத்தொகை (உக) கூறுகின்றார்.

என்னுமாந்தவகைகேளு இபனும்வாதமாந்தமுடன்
உன்னிபயித்தமாந்தம் உயர்செறிசேஷ்மமாந்தம்

பன்னிபவிஷமாமாந்தம் பாடுதுபோரின்மாந்தம்
துன்னியவாலிமாந்தம் சாயமாந்தம்இன்னமந்தமினே. (கசுக)

எண்சீராசிரியவிருத்தம்.

கேளேநீர்மாந்தமுடன்செரியாமாந்தம் கேடுபுரி கட்டுமாந்தத்தி னோடு - பாளானபால்மாந்தம துலையாமாந்தம் பகாரியனரிமாந்தந்த லையின்மாந்தம தாளானகணமாந்தம் வலிப்புமாந்தம் சதியானசுழிமா ந்தம் முங்குமாந்தம், வேளானஜன்னிமாந்தம் ஊதுமாந்தம் வீக்கமு முமாந்தமுடன் இருபத்தொன்றே. (கசுஉ)

வாதமாந்தகுணம் அறுசீராசிரியவிருத்தம்,

ஒன்றும்வாதமாந்தகுணம் உரைக்கக்கேளுதிருந்தவே
பொன்றுகால்கைகுளிர்ந்துதாம் பொருமும்விழிபால்பார்த்தமுறும்
குன்றுமெய்யில்வேர்வையுமாம் குழியவலிக்கும்பவிதமாய்
அன்றுதுடிக்குங்கோட்டாவி துலையுநாசிப்புண்ணாமே (கசுங)

பித்தமாந்தகுணம்.

ஆமேபித்தமாந்தகுணம் அடுத்தேதவாந்திபேதியுமாய்
தாமேமூர்ச்சையாய்க்குரலுந் தயங்கிக்கம்மலாகிவிடும்
போமேமேனிமஞ்சனித்துப் புசியும்வேர்வையாய்க்கடுக்கும்
வாமேகுழவிதேகமெங்கும் வலிக்குங்குளிருமயக்கிடுமே. (கசுச)

(சேஷ்மமாந்தகுணம்,)

மயக்கிடும்சேஷ்மமாந்தம் வகையினைவகையாய்க்கேளு
முயக்கிடுகளிருண்டாகும் முழுதுடல்சிறுசிவிர்ப்பாம்
பயக்குநாவும்வெளுக்கும் பயந்தேஅழலைபன்கொடுக்கும்
சயக்கவயிறுகழிக்குவருந் தளராபொருமும்வயிறதுவே. (கசுரு)

(மாந்தகுணம்-கூறுகின்றார்)

பிள்ளையுங்கனைத்திருக்கும் பிரண்டைபோல்காலும்பின்னி
உள்ளமுங்கண்சிவந்து உடம்பினில்நோயுங்காட்டும்
துள்ளியேகையில்கக்கா அடுக்கெனச்சுழலுமாகில்
கள்ளமாய்க்குரலுக்கார்ந்துங் கண்குழிந்திருக்குமாந்தம், (கசுசா)

மாந்தத்தின்குணமேகேளாய் வயிறுதீபாம்வெப்புநாறும்
சேர்ந்துகைகால்குளிர்ந்துதேகைபழுவையுண்டாது
வாந்தியுந்தவேபண்ணும் வயுதேயுர்ந்துக்காயும
வாந்தியேமயக்கமுண்டா மாந்தத்தின்குணமதாமே. (கஎ)

மாந்தத்தின்குணமேதென்றல் வயிறுபூழியுமயக்கமதாய்
காந்துபசியுமில்லாமல் காமவிசாரங்கொண்டவர்போல்
சோர்ந்திடுக்குங்கைகாலுங் குளிர்ந்தேகாலுத்தொல்லுலகில்
காந்தள்மலர்போல்கையுடையாய்க் கனத்தமாந்தகுணமிதுவே. ()

தன்வந்திரி.

பாரோசீதமலமுடனே பதமாய்க்கழியும்பலவிதமாய்
தேரோகெட்டப்பாலதுபோல் தெளிந்தகண்ணீர்ப்போலவுமே
வாரோகழியுங்குணம்பாரு வலமாய்உள்ளங்கைகாணும்
நேரோகுளிர்ந்ததண்ணீர்போல் நிசந்தனென்றுந்தான்பாரோ. (௧௬௯)

பாரோவெதும்புங்கண்சுழலும் பனிபோல்தேகமிகவேர்க்கும்
பாரோமுகமும்பலவிதமாய்ப் பளிங்குபோலேஒளிமினுக்கும்
பாரோயிந்தகூறத்தனைப் பருவம்அறிந்துகொண்டெல்லாம்
பாரோயிந்தக்குறிதானே பண்பாய்மாதமென்றுரையே. (௧௭௰)

மாந்தத்துக்கு பச்சிலைச்சாறு - வெண்பா.

கொச்சிப்பொடுதலையும்நுணா * வேலியிந்நான்கும்
பச்சைஇலைசரியாய்ப் பாலருந்கு - அச்சமற
நீர்வரவேதான்நறுக்கி நீகொடுக்கவேமாந்தம்
ஊர்விட்டுப்போமென் றுரை. (௧௭௧)

மாந்தத்துக்கு வேறு பச்சிலைச்சாறு.

அறுசீராசிரியவிருத்தம்.

உத்தாமணியும்பேய்மிரட்டி உகந்தசாறுணைக்கிலையுடனே
வித்தாமுள்ளவெதுப்படக்கி வேலைகொச்சில்இவை ஆறும்
ஒத்தேவதக்கிச்சாறுகொண்டு உயர்ந்தசெம்புசிறுதேக்கு
சற்றேஆமைஓடுச்சுட்டுச் சாற்றிற்கொடுமாந்தம்போமே, (௧௭௨)

[மாந்தத்துக்கு வேறுசுரசம் நிலமண்டில வாசிரியப்பா]

ஒருபிடிபொடுதலை ஓர்கல்லுப்புடன்
இருவிதம்ஒன்றதாய் இடித்துச்சாறுசெய்
சிறுவிதசட்டியிற் சிறுகசெய்தபின்
தருவிதம்உண்டிடத் தணியுமாந்தமே. (௧௭௩)

மாந்தத்துக்கு வேறுகுழம்பு அறுசீராசிரியவிருத்தம்.

வெற்றிலைந்தாம்புபதினொன்றுமேவுவசம்புஅவ்வளவு
பற்றியஉள்ளிந்தான் இரண்டுப்பண்பாந்திப்பிலிதான் ஒன்று
சுற்றிவெதுப்பித்தான்அரைத்துச் சுகமாய்ப்பருவக்கணக்கபடி
வற்றியவெந்நீர்தனிலிடவே மாந்தம்போமென்றருளினரே. (௧௭௪)

மாந்தத்துக்கு வேறுகுடிநீர்.

விடுமேஓமம்உள்ளியுடன் மீறுமிளகுதிப்பிலியும்
நடுமேசிலைதனில்முடிந்து நன்றாய்காழிநீர்தன்னில்
இடுமேஅடுப்பில்எட்டொன்றாய் இதமாய்க்காச்சிக்குடிநீரை
கொடுமேமாந்தம்உள்ளவெலாங் குடிபோமென்றுக்கூறினரே (௧௭௫)

மாந்தத்துக்கு வேறுமருந்து,

வல்லைக்குரோட்டை இலையதனை வாட்டிப்பிழிந்துதானதிலே
கல்லியோடுநல்வசம்புக் கனத்தவட்டத்திப்பியுடன்
சொல்விச்சுட்டுஆட்டியதை சுருக்கில்கலக்கிவார்த்திடவே
மல்லும்பொல்லாவினையான மாந்தம்போமென்றருளினரே. (௧௫௬)

மாந்தத்துக்கு வேறுதுவளையும் உள்ளுக்குமருந்து,

வேலிப்பருத்திமேனியுடன் வேளையிண்டுப்பொடுதலையும்
ஆவித்தின்னும்அநந்தியிலை ஆறுவதக்கிச்சாறுகொடு
கோலவசம்புஆமையொடுக் குலவும்ஓமம்சுட்டரைத்துக்
காலிற்கையில்துவளையிட்டுக் கடுகக்கொடுமாந்தம்போமே, (௧௫௭)

மாந்தத்திற்கு வேறுதுவளை தேரையர் கலிவிருத்தம்,

ஆவும்சின்னி அடவிவெண்ணொச்சிலை
ஏவுவேப்பிலைச் சேந்திலிபிடித்துநீர்
மேவுமூன்றுநாள் மேல்த்துவளையிட
நோவுமாந்தம் நொடிக்குள்ளேநீங்குமே, (௧௫௮)

மாந்தத்துக்கு வேறுகியாழம் வெண்பா.

வேளைவேர்ச்சுக்குடனே வெந்தயமும்வெள்உள்ளிப்
பாளைசேர்ஓமம் பெருவசம்பு—வாள்விழியாய்
ஒன்றாகக்காய்ச்சி உடன்குழவிக்கிடக்
கண்டாலும்மாந்தம்போம் காண். (௧௫௯)

மாந்தத்துக்கு வேறுகியாழம் எண்சீர் ஆசிரியவிருத்தம்.

என்றேமஞ்சணத்திநொச்சியில் இனியவேலிக்கழல்கொடியும்
ஒன்றாய்ஒவ்வொன்றெருபிடியாய் ஒக்கவறுத்துச்சுட்டிடினில்
நன்றாய்க்கருக்கிநீர்நாழி நபத்துவிட்டுஅப்பேற்றி
கன்றாய்ஓமம்வசம்புசுக்கு மிளகுப்பொடித்தலைக்காயாமே. (௧௬௰)

ஆமேதிப்பிலிஅதனோடு அருகல்லெண்ணையில்சிவக்கத்
தாமேவறுத்துப்பொட்டணமாய்ச் சமைந்தநீருடன்போட்டு
வேமேகாய்ச்சிபோர்சங்கு விரைவில்கொடுப்பீர்ஆமாகில்
போமேமாந்தமுள்ளவெல்லாம் போயிக்கடவிற்புக்கிடுமே. (௧௬௧)

மாந்தத்துக்கு வேறுகியாழம்,

உத்தாமணியிலைவேளையின்வேர் உகந்தநொச்சிப்பொடுதலையும்
சித்தமுருங்கைநுணாயிர்க்குச் சேரவறுத்துநீர்விட்டு
ஒத்தாய்ஓமம் * திரிகடுகு உபர்ந்தவசம்புமுடிந்ததனை
வைத்தெட்டொன்றாய்க்காய்ச்சிவர மாந்தமெல்லாம்ஓடிடுமே (௧௬௨)

மாந்தத்துக்கு வேறுகியாழம்,

சுக்குமிளகுதிப்பிலியும் தூய்யஓமம்உள்ளியுடன்
ஒக்கநறுக்கிச்சீலையினில் உகந்துமுடிந்துநீர்உழக்காய்

செக்கச்சிவக்கக்காய்ச்சியபின் சீராய்ச்சங்குபுகட்டிடவே
மிக்கமாந்தமிணிநீதாஷம் விட்டேயோடுங்கண்டாயே. (௧௱௨)

மாந்தத்துக்குவேறுஙியாழம் தன்வந்திரி,

எண்சீராசிரியவிருத்தம்,

ஙியாழத்தால் மாந்தங்கள் போகக்கேளு கெடியான மாசியத்திரி பற்பாடந்தான், கயாழத்தால்நாயுருவிமுட்காவேளை கருஞ்சீரகத்துடனே கோழி யெச்சம் இயாழத்தால் பற்பமாயச்செய்துக்கொண்டு இருவேளை சங்குச்சுக்கோடேவலம், ஙியாழத்தால் ரோகணிபும் பறங்கிச்சக்கை சீக்கனும்பட்டைக்காலட்டம்புல்லே. (௧௱௩)

புல்லானகடுக்காயும் மாங்காயும் புகழான வசம்போடு தான்றிமுத்தும், வில்லானசீர்ப்படியிரண்டதாகும் விதமாக வட்டொன்றுங்காய்ச்சியேதான், கல்லானமாந்தமொடு அழிமாந்தங்கள் கைப்பிணிப்பால் வந்ததொருகழிச்சல்மாந்தம், மல்லானமாதாவாய்ச் சிறுபண்டந்தால் மருவிவந்தமாந்தமெல்லாமயங்கிப்போமே. (௧௱௫)

மாந்தத்துக்குவேறு குளிகை அறுசீராசிரியவிருத்தம்,

என்றேஓமம்திப்பிலிசுக்கு சீரகமுங்கொத்தமலி
பன்றமைமேயாடுகுராசனி பகாதிறுந்துர்நிறையாய்
தான்றுநீரில்தானரைத்து அதித்அகல்வதுவணைமெண
உண்டாமாந்தம்உள்ளளலாம் ஓடுங்கண்டாய்உண்மையிதே, (௧௱௬)

மாந்தத்துக்கு வேறு குளிகை,

மாசிலார்க்குமாந்தஉண்டை வண்மையுடனேதான் அறைக்க
ஆசையாகவாய்விளங்கம் ஆமைஓடுதன்மிளகு
வாசமானபொடுதலைக்காய் வசம்புதிப்பிலிகழல்பருப்பு
கூசாமல்சரிநிறையாகக் கூட்டிநீவைத்தரைத்திடுமே, (௧௱௭)

அரைத்துமருந்துபொடுதலைச்சா றம்பிதனிலேவிட்டரைத்து
நினைத்தருரைக் காயளவு நிழலில்உலர்த்திக்குளிகைதனை
காத்தின்கழிச்சல்இருமலுக்கு சொற்சிறுவழுதலைக்ஙியாழத்தில்
உரைத்துஉண்டைதனைகொடுக்க உடம்பிற்பிணியுந்தீர்ந்திடுமே, ()

இதுவுமதுஅதற்கு அநுபானம்,

வாந்திபொருமலுக்கெல்லாம் வளரும்வேலிக்ஙியாழத்தில்
ஓய்ந்தவெருவாய்க்கழிச்சலுக்கு ஓமக்ஙியாழத்தன்னிலிட
கேந்தியானமாந்தத்துக்குங் ஙியாழமறிந்தேயிடுவீரோ
மாந்தம்விட்டுத்தானுமும் வளரும்பிள்ளையாமென்றே, (௧௱௯)

மாந்தத்துக்கு வேறுகுளிகை.

திரிகடுகோமம்உள்ளிச் சீர்பெருங்காயமற்றக்
கரியசீரகம்வகைக்குக் கணக்கதுவிருகன்னாலு
அரியதோர்வசம்புமூன்று அறிதகிப்பதினொந்தாரும்
பூரியசாரணைவேர்ஐந்தும் பொடுதலைக்கொழுந்துமாவே, (களo)

கடுக்காய்களில் எழுவகைப்படும் அவையாவன.

விசையன்கடுக்காய் விந்தியதேயத்திலுற்பத்தியாய்ச் சுரைக்காய்போன்றிருக்கும் இதற்குவாதந்தீரும் உரோகணிகடுக்காய் கன்னிமாகுமரியிலுற்பத்தி நால்வகிறுயிருக்கும் இதற்குசன்னிதீரும் பிரிதிவிகடுக்காய் சௌராஷ்டிரதேயத்தி லுற்பத்தி மேற்றோல்மெல்லியதாயிருக்கும் இதற்குபயித்தியந்தீரும் அமுர்தகடுக்காய்காசிதேயத்திலுற்பத்தி சதைபோன்றிருக்கும் இதற்கு சேஷுமந்தீரும் சீவந்திக்கடுக்காய்காளிலுற்பத்திபொன்னிறமாயிருக்கும்இதற்குமூலந்தீரும் திரிவிரிதைகடுக்காய் மலைகளிலுற்பத்திபஞ்சவன்னமாயிருக்கும் இதற்கு விரணந்தீரும் அபையின்கடுக்காய் பொதிகைமலையிலுற்பத்தி கருப்பாயிருக்கும் இதற்குதுன்பந்தீரும். (களக)

ஆம்பெருந்தும்பைக்கொழுந்து அவ்வளவுவேலிப்பத்ரம்
ஓம்பெறதான்வெதுப்பிஒன்றாகவேஇடித்து
தாம்பெருந்தும்பைச்சாற்றில் தனிபொடுதலையின்சாற்றில்
காம்படஅரைத்துச்சுண்டைக்காயளவுருண்டைசெய்யே (களஉ)

செய்ததோர்குளிகைதன்னைத் திகழ்நிழல்உலர்த்திக்கொண்டு
வையகபாலர்தங்கள் வளர்பருவத்தைப்பார்த்து
கொய்யகால்அரைமுக்கால்முழுக் குளிகைவெந்நீரிலீய
மைமாந்தக்கட்டுமாந்தக்கழிச்சலும் வலிப்புபோமே, (களங)

மாந்தத்துக்குவேறுகுளிகைதேறையர்கலிவிருத்தம்,

போகுஞ்சண்பகப்பூ இலாமிச்சம்வேர்
ஏகுங்கோஷ்டமோடேலங்கோரோசினை
வேகுஞ்சாத்திர பேதிமதூரமும்
வாகும்வெட்டிவேர் மாசிப்பச்சொன்பதே, (களச)

ஒன்பதுவகைக் கொன்றுக்கழஞ்சிடை
பன்பதுவெட்டி வேர்த்தண்டுச்சாற்றினில்
என்பதுவழ நாழிகையாட்டிநீ
பின்பதுகுன்றிப் போலத்திரட்டியே, (களரு)

திரட்டிடஉலர்த்தி யொருமாத்திரை
விரட்டிடுமுலைப்பாலிள வெந்நீரில்
குரட்டிடும்இழந்தே கொடுமூன்றுநாள்
காட்டிடும்பின்கடும்பிணியாவுமே, (களசா)

மாந்தத்துக்குவேறுகுளிகை தன்வந்திரி.

உரைப்பேன்பூரம் பலம்அரைதான் ஒகோலவங்கம் ஏலமுடன் திரைப்பேன்வசம்பு சீரகந்தான்திறமாய்மாசி அதிவிடையம் கரைப்பேன் வகைக்குக் கால்பலமாய் சுணமாய்ப்பூரஞ் சுத்திசெய்து மரைப்பேன்கல்வம் அதிற்போட்டு மாசிப்பத்திரிவேர்ச்சாறே. (௧௭௭)

வேர்ச்சார்சாமம் ஒன்றரைப்பாய் விஷ்ணுக்கரந்தைச் சார்சாமம் வேர்ச்சாற்வார்த்து அரைத்துக்கொண்டு விரமாய்க்கொத்தமல்லிவிரை ப்போல் வேர்ச்சாற்குளிகை செய்துக்கொண்டு விளங்குநிழலில் உல ர்த்தியபின் வேர்ச்சாற்குளிகை செப்பில்வைத்து வேதப்பொருளாம ணதிலெண்ணே, (௧௭௮)

எண்சீர்விருத்தம்,

எண்ணவேகுளிகையொன்றெடுத்துக்கொண்டுஎழிலானமாந்தத் தின்கியாழத்திய, எண்ணவேழுடிவிடு மாந்தமெல்லாம் இயம்பினேன் முன்சொன்னதெல்லாம்போகும், எண்ணவேஇம்மொழிபோல் ஆர் தான்சொல்வார் எடுத்தமுறையாடிபிந்த முன்னூறுபாரு, எண்ணவே முன்சொன்ன மாந்தமெல்லாம்என்சொல்வேன்பறந்தோடும்இதனால் பாரே. (௧௭௯)

மாந்தத்துக்குவேறுநெய்,

கட்டளைக்கலித்துறை.

சுந்தாவின்னெய்யும் ஒருநாழிஓமம்துடிபலந்தான்
உத்தாமணிஇலைவெற்றிலைக் காம்பொவ்வொருபிடியாய்
வித்தானசுக்குடனே வசம்புள்ளிவிருதினைடை
எத்தாய்அரைப்பித் தெரியிடமாந்தங்களேகிடுமே. (௧௮௰)

மாந்தத்துக்கு வேறுஎண்ணெய்,

ஏகும்அகத்திச்சாரணைவேலி எண்ணெய்ஓர்உழக்காய்
வேகமதாகவுங் கூனன்முதுகுள்ளிவெண்வசம்பு
ஆகமதாகவிருகன்னைடையும் அரைத்ததனைப்
பாகமதாகஎரியிடமாந்தம் பறந்திடுமே. (௧௮௧)

சொல்லாறுவல்லினமெல்லினமோடிடை தோன்றிலொன்று
நில்லாதுநோநிரையாய் நிரைந்துநிரம்பியதாற்
கல்லாதமாந்தர்கடேமாங்கனியென்பர்கற்றுணர்ந்த
நல்லோரவர்களுங் கூவிளங்காயென நாட்டுவரே, (௧௮௨)

மாந்தத்துக்குவேறுஎண்ணெய் தன்வந்திரி

கலிவிருத்தம்.

செய்திடமாந்த எண்ணெயைச்சொல்வேன்
வைதிடஇஞ்சி சங்குடன்சின்னி

கைதிடகாணி காந்தையும்வன்னி
செய்திடஎல்லாம் நோய்ப்பிழிந்திடே, (௧௮௩)

பிறிந்துநிற்றோண்டந்தின் எண்ணெய்
கலந்திட்டேயொரு கட்டையால்தீயிடு
செவந்திடக்காய்ச்சி சிறுகஇறக்கிடு
மெலிந்தநோய்தீர விளம்புவேன்கேளோ. (௧௮௪)

கேளிடுமந்தம் மலபந்தமாந்தம்
சேலிடுசலத்திற் செனிசிறமாந்தம்
பாலகர்உண்ணப் பறந்திடும்பாரு
சிலக்கொடிய சீதளமபோகுமோ. (௧௮௫)

மாந்தத்துக்குஎண்ணெய் அறுசீரசிரியவிருத்தம்,

விளக்கெண்ணெய்அரைஅழாக்கு வெண்காயம்பெரும்பூண்டைந்து
தளுக்குறுமணித்தக்காளிச் சாறதுஉழக்கதாகும்
களக்கமாய்ச்சாறும்எண்ணெய்க் கலந்துவெண்காயந்தன்னை
அளக்கவேஅறிந்துபோட்டு அடுப்பில்வைத்தெரித்திடாயே. (௧௮௬)

எரித்துபொன்னிறமதானால் இறக்கிவடிக்குந்கொண்டு
விரித்திடுங்கடுகுரோணி விளம்பியவிருகளென்று
தரித்துமேவருந்துதாளாய் தானதிற்போட்டொன்றுக
பிரித்தொருநாண்டிஎண்ணெய்ப் பிள்ளைக்குக்கொடுப்பதாமே. ()

கொடுக்கவேதான்உட்காய்ச்சல் கொடுங்கலைக்காய்ச்சல்மாந்தம்
முடுக்கியதொண்டைவாய்ப்பண் மூலத்தின்சூடுமற்ற
படுக்கவேயிசைப்பொல்லாத பலவகைசழிச்சலெல்லாம்
அடுக்குடன்ஓடிப்போமென் றரைந்தனர்நால்வல்லோரே, (௧௮௮)

மாந்தத்துக்குவேறு எண்ணெய்.

கஞ்சாங்கோரைப்பிரமியிலை கனத்ததுளசிபழம்பாசி
செஞ்சாதில்விளாவல்லாரைச் சீந்தில்தண்டுமூலமுடன்
மிஞ்சாவசம்புகோகணியும் வெண்காவெளியோர்விருகனை
அஞ்சாஎண்ணெய்ஓர்அழாக்கு அதிலிட்டெரித்துபதம்பாரே, ()

பாரேயிறக்கிவடிகொண்டுப் பரிவாந்துட்டைஒன்றுக
கூரேபாலர்உள்ளுக்குக் கொடுக்கமாந்தம்போமிப்பால்
காரேய்ச்சாபத்தியமாய்க் காதலனைப்பெற்றத்தாயை
நீரேவைக்கநலமாகும்சீலவிழிமாமடமயிலே, (௧௯௰)

தோஷமாந்தத்துக்குதைலம் தேரையர்
கலிவிருத்தம்,

அன்னமேமுருக்கப்பட்டைஅத்துடன்
பின்னமேவண்கருவும் வெள்ளுள்ளியும்

இன்னம்வேப்பெண்ணெயிவைநானுடன்
சன்னமேசெய் தைலம்இறக்கிடே, (௧௬௧)

இறக்கிடுந்தைலமதிற்குத்தியே
உறக்கிடுங்கண்ணில் இட்டுறநாவினில்
துறக்கிடுந்தடவத்தோஷ மாந்தமும்
மிறக்கிடுமிது மெய்ம்முறைகண்டிடே. (௧௬௨)

மாந்ததோஷத்துக்கு சாறுவெண்பா,

ஈரவெண்காயமுடன் சதிமுடக்கொத்தான்இலையும்
போய்வெதுப்பிப் பிழிந்திட்டுச்சேரவே
மூன்றுகாசெடை புகட்டமுனைமாந்ததோஷம்
ஊன்றுதாவில்லாமல் பறந்தோடும், (௧௬௩)

மாந்ததோஷம் வலிப்பு மலக்கட்டுக்கு பச்சிலைச்சாறு

எண்சீராசிரிய விருத்தம்.

நல்வேளை இலைவசம்பு வள்ளித்தமாலம் நையவேநருக்கிவெதுப் பிப்பிழிந்து சல்லியமாங் குழந்தைகட்குப்பருவம்பார்த்து துந்நக்கால் அரைமுக்கால் முழுச்சங்காக, புல்லவே புகட்டிடவேமாந்ததோஷம் பொல்லாதவலியுமலக்கட்டுந்தீரும், அல்லளகப்பவளஇதழ்பெண்ணே யிந்தை அன்புடனேசெய்தருமம் ஆக்கமாமே. (௧௬௪)

மாந்தகோஷவலிப்புக்கு உச்சியிலப்பு நற்குங்

கால்கையிற் கட்டமருந்து

அறுசீராசிரியவிருத்தம்,

சிறுபள்ளடியும் வெள்ளுள்ளித் தின்னும்நற்கிழங்காய்நெல்லி
உறவாய்அரைத்துப் பிள்ளைதன துச்சில்கப்பிமிஞ்சினதை
நெறியிரண்டு மூன்றுக்குளிகை நோய்உருட்டிநெடுஞ்சீலை
மறைவாய்அதனிலேமுடிந்து மாறுகைகாலிற்கட்டே, (௧௬௫)

மாந்தம்பாலகிரியைக்கு கியாழம்.

வேலிப்பரித்தி யொருபிடியும் விரும்புஞ்சுக்கு சடாமாஞ்சில்
கோலவிளாவும் வசம்புள்ளிக் குறித்தமிளகுகூனனுடன்
சீலஓமஞ்சீரகமும்சிவக்கக்காய்ச்சு யெட்டொன்றாய்
பாலர்க்கொருசங்கிடுவீரேல் பாலக்கிரியைப்போய்விடுமே, (௧௬௬)

மாந்தம்வயிற்றுப்பல்லுக்கு மருந்து,

அசமதாகமும்வசம்பு ஆனைசட்டிக்காயவைத்து
வசமாய்வருத்துப்பொடிசெய்து மணியின்சாற்றிலிவையிரண்டும்
நிசமாய்க்குழப்பிக்கொதியிட்டு நீயோர்சங்குகொடுத்தாற்கால்
அசையாமாந்தம்வயிற்றுப்பல் அசனும்பின்னர்அணுகாதே. (௧௬௭)

மாந்தஉப்பிசத்துக்கு லேகியம்,

ஒப்பம்ஓமம்காசெடைவை உகந்துசட்டியினில்வறுத்து
குப்பைமேனிவேர்பட்டைக் கூறும்இரண்டுபலந்தானே
அப்புஓர்அரைப்படிவிட்டு அளவைவற்றவேகாய்ச்சி
வைப்பாய்க்கொடுக்கவேஉப்பல மாந்தம்போகுங்கண்டாயே. (௧௧௮)

மாந்தம்வயிற்றுவலி செரியாமாந்தம் வயிறூதலுக்கு

மருந்து,

வேலிப்பரித்திச்சாறுழக்கில் மீறுவசம்புந்திரிகடுகு
மாலிக்கோரோசினைஇத்தும் வகைக்குவிராகனெடையிரண்டு
வேலிக்கொழுந்துமோநான்கு விராகன்அரைத்தூட்டகொளமாந்தம்
வாலர்வயிற்றுவலிசெரியா மாந்தம்வயிறூதற்போமே, (௧௧௯)

மாந்தபொருமலுக்கு எண்ணெய்

எண்சீராசிரியவிருத்தம்,

பேய்மிரட்டிவெதுப்படக்கிப் பொடுதலைத்தான் பிரமியிலைவே லிபொடுதுளசிதுத்தி, சாய்கின்றஅகத்தியிலைச்சமன்இடித்துச் சாறுப டிகால்பச்சைமஞ்சட்சாறு, வேய்கின்றவிசமதுகூடம்கூட்டி விளக்கெ ண்ணெய்ப்படிஅரையுமாகவேதான் ஆய்கின்றஓமங்கால்பலமதாகும் ஆமையோடுச்சுட்டுப்பலமுங்காலே, (௨௰)

காலானஉள்ளிபலங்காலதாகும் கனவசம்புபலங்காலாம் இடித் துக்கொண்டு மாலானஎண்ணெயினிற் கலந்துக்காய்ச்சி வடித்து ஒரு துட்டெடையாம் எண்ணெய்தானும், வேலானவெண்காயம்பணவெ டைதான்ஒன்று விபாமாய்பொரித்து போட்டிழைத்துபின்னும், பா லானபெருங்காயம் பணஎடையுரைத்துப் பண்பாகவே கொடுக்கவே கேளே (௨௰௧)

கேளேநீமுதல்நாளிற்கழிச்சல்மெத்தக் கிளரிவருமற்றநாளதுது வக்கி, தாளேநீபொருமலுடன் சத்திமாந்தம் தணியாதஉறக்கமதுநீ ருந்தீரும், நாளேநீவியாதியதுதிரமட்டும் நலமானஎண்ணெயது கொ டுக்கநன்று, நீளேநீபத்தியந்தான் பிசகவேண்டாம் நீலவிழிமாமயிலே நிதானிப்பாயே. (௨௰௨)

மாந்தத்துக்கு எண்ணெய்

அறுசீராசிரியவிருத்தம்,

நன்றேசங்குஆமணக்கு நாவல்நன்னாரிக்கருந்துளசி
கொன்றேசின்னிபற்பாடம் குப்பைமேனிக்கொளுமிபை
வென்றேயிவைகள்வகைவகைக்கு வேர்பிடிவெட்டிசவி இருநாள்
ஒன்றேஉலர்த்திதான்இடித்து ஒருதூணிநீரில்ஊட்டிடுமே. (௨௰௩)

ஊட்டிடுமணித்தக்காளியுடன் ஓரிலைதாமரை அவுரிபுங்கு
நாட்டிடுஇவ்விதம் வகைவகைக்குநாழிச்சாற்றில்பிழிந்நாட்டி
வாட்டிடு சங்கிமதாமுடன் மாஞ்சில்சண்பகப்பூவுடனே
காட்டிடுலவங்கம்செவ்வியமும் கடுக்காயுடன்வால்மிளகதுவே. (உளச)

அதுவேபண்டுபொங்கிபுடன் அடவாய்வீதம்வகைவகைக்கு
வதுவேயிரண்டுவிராகனெடை வாங்குகடைசரக்கையெல்லாம்
பதுவேஇளம்வறுப்பாய்வறுத்துப் பாக்குடன்இடித்துத்தூளாவை
அதுவேவீரிலுடன்தாக்கி அறிவாய்ப்பின்னுமருந்ததுவே. (உளரு)

மருந்தேலிங்கம்மனோசிலையும் வாளம்பூரம்கெந்தியுடன்
பொருந்தேபுழுகுகஸ்தூரிப் புகழாய்விராகன் எடையிரண்டு
அருந்தேவீதம்வகைவகைக்கு அடவாயெடுத்துத்தூள்செய்து
வருந்தேகோரோசனையதுவும் வளமாய்விராகன் எடைபோடே, உளசு

எடையாதேசிற்றுமணக்கு எண்ணெய் அதிலொருபடியிட்டு
நிடையாய்அடுப்பில்இதையேற்றி தீஇதாமம்எரித்துப்பின்
நடையாய்ச்சுண்டிடும்நீரெல்லாம் நமையாய்மெழுகைநிறங்காணும்
படையேதூத்தும்போய்போகும் பண்பாயிறக்கிப்பார்த்திடவே. ()

இறக்கிஅதனைவடிக்கட்டி எடுத்துஇருத்திடுசகலமதில்
வறக்கிவாலைப்ப தம்மைத்து வஸ்துஇதுவெளப்பணிந்திட்டு
நறக்கிஎண்ணெதனை ரெண்டு நலமாய்இரண்டெழுந்தனடை
உறக்கிபிள்ளைதனக்கேழு உபாயமாய்உள்ளுக்குக்கொடுமே. (உளஅ)

இதுவுமது வேறுசத்தம்.

கொடுத்துமேஇரண்டுநாழிச் சென்றபின்மூலைப்பாலீந்து
எடுத்தநாள்தவறுஇந்த எண்ணெயைக்கொடுத்தபின்னர்
அடுத்ததோர்குழந்தைதமாதா அவளுக்குப்பத்தியங்கேள்
விடுத்ததோர்வறுத்தஉப்பு வெந்நீரம்மிளகுசாற்றே (உளகூ)

வெந்நீரும்அன்னம்உண்டால் வினையதுஅகண்டுபோகும்
கன்னியேபதனமாக காமனைநினைக்கலாகா
நன்னிமையாகவுமே நாளதுகடந்துதானால்
பின்னுமேவருநாதுண்மைப் பிள்ளையுஞ்சுபமஸ்தம்தந்தே (உளய)

சுபஸ்தமாம்எழுந்சென்று பின்புநீஎழுந்தன்னி
நிபஸ்தமாய்தாயும்பிள்ளை இருவர்க்கும்தலைநீர்வாரு
தபஸ்தமாய்ஓமக்கேய்ந்து சலமதுவெந்நீர்ப்பட்டால்
சபஸ்தமாய்வினைவிட்டோடும் சடமதுவளுக்குத்தானே (உஅக)

வலுக்கவேஇந்தஎண்ணெய் மாந்தந்துக்கெல்லாம்ஆகும்
குலுக்கவேயெண்ணை தன்னைக் கொடுத்துபின்பேதிஆகும்

உலுக்கவேஅதிகபேதி சோபமும்மூர்ச்சையானால்
தெலுக்கெனக்கைசீவி கெருணைத்திற்கியாழம்வையே (௨௧௨)

வைத்துமேகியாழம்ஆக்கி வதுவினிற்கழஞ்சுமூன்று
உத்துமேகொடுத்தபின்பு உபாயமாய்முலைப்பால்ஊட்ட
சித்ததும்வளையுஞ்சோபம் கருணைத்தினில்வாங்கிப்போகும்
வற்றினதேகந்தானும் வச்சிரம்போலேயாமே. (௨௧௩)

மாந்தம் கருங்கிரந்தி அட்சரம்கணங்கள்மேகவெட்டைக்கு

எண்ணெய் ஆறுசீராசிரியவிருத்தம்,

மணித்தக்காளியிலைத்தூளசி வளருந்துத்திப்பிரமியிலை
கணித்தவில்வம்வல்லாரைக் கையாந்தகரைப் பொடுதலையும்
தணித்தநுணாபுங்கிலைச்சங்குச் சமனிவையிடித்தச்சாறுபடி
துணித்தஒன்றுதான்றிக்காய்ச் சுக்குக்கடுக்காய்த்திப்பிலியே (௨௧௪)

திப்பிலிபொத்தோடாத்தை திகழும்ஓமம்வசம்புடனே
மப்பிலியானகஸ்தூரி மஞ்சள்வகைக்குப்பலமரையாய்
இப்பிலிசாதிக்காயொன்று இவைகளிடித்துச்சாற்றில்விடு
எப்பவிளக்கெண்ணெய்படியொன் றிட்டெரித்துப்பதமெழுகே (௨௧௫)

மெழுகுப்பதமதிலெண்ணெய் வடிவிட்டொருசாண்டிதனயர்க்கு
அழகுபெரியோர்க்கிருசாண்டி யேத்துஏழுநாளிடவே
கழகுமாந்தம்அட்சரமும் கணங்கள்கரிபகிரந்தியொடு
விழுகுங்கொடியப்படர்மேக வெட்டைத்திரும்பைங்கொடியே, ௨௧௬

ஊதுமாந்தகுணம்,

உடலெல்லாம்ஊதிக்காணும் உவாந்தியுங்கழிச்சலுண்டாம்
குடலெல்லாம்இரைச்சலாகிக் கூப்பிடுஞ்சமுத்திரம்போல்
தொடையெலாம்வலிக்குமிக்கச் சரமுடன்கடுப்புமாகும்
அடவினால்ஊதுமாந்தம் அதுசெயுங்குணங்கள்தானே. (௨௧௭)

ஊதுமாந்தத்துக்கு குளிகை,

கலிவிருத்தம்,

ஓதுங்காரம் அரைகண்டுசோகனி
நீதியாய்க்கருஞ் சீரகம்வேண்டுமுலை
மாதுபாலினில் மாத்திரைசெய்திட
ஊதுமாந்தம்விட் டோடுவதுண்மையே, (௨௧௮)

மாந்தம் ஐந்துக்கும் கியாழம்,

அறுசீராசிரியவிருத்தம்,

பொடுதலைவேம்புமாவும் புளிநுணாகொச்சில்வேலி
சடுதியிலாக்கிவ்வேயும் சமன்கொண்டுக்கியாழம்வைத்து

இடுவகைகழமம்உள்ளித் திப்பிலிக்கூடக்கூட்டி
அடுதல்சீர்நாழிதன்னில் அடுப்பினில்எட்டொன்றாக்கே (௨௧௯)

ஆக்கிடுங்கியாழந்தன்னை ஆணதோர்சங்குவார்க்க
போக்கிடும் ஊதுமாந்தம் போர்மாந்தம்சத்திமாந்தம்
தேக்கிடும்சொரியாமாந்தம் சிறந்திடுங்கட்டுமாந்தம்
தாக்கிடும்மாந்தம்ஐந்தும் தரணிவிட்டோடுமென்றே. (௨௨௦)

மாந்தம் எழுக்கும்மருந்து தேரையர்

கலிவிருத்தம்,

நீங்குரோகினை நேர்உள்ளித்திப்பிலி
ஒங்குமா மதுரம்வகை ஒன்றுக்கு
காங்குநீயோர் கழஞ்செடைத் தூக்கியே
வாங்கும்அண்ட வெள்ளைக்கருவார்த்திடே (௨௨௧)

வார்த்திடுமுலைப்பால் மிதமாகவார்
ஊற்றிடுஅரைத் துள்ளுக்குமூன்றுநாள்
ஏற்றிடும்வகை மாந்தம்ஓர்வகையும்
ஆற்றிடும்புளி உப்பாகாதன்னமே, (௨௨௨)

மாந்தமயக்கத்துக்கு மருந்து

அறுசீராசிரியவிருத்தம்,

உத்தாமணியைஅனல்தாக்கி ஒடுக்கிக்கயக்கி ரசம்வாங்கி
பெற்றோர்ப்பாலிற்சீரகமும் பேதிகடுகுரோகணியும்
வித்தாரமாகஅரைத்தருந்த வெப்புமாந்தமயக்கம்போம்
நற்றாமரைப்போல்முகநல்வாய்நல்கமாந்தம்நாடாதே (௨௨௩)

பித்தகணபாண்டுக்குக் கியாழம் தன்வந்திரி

எண்சீராசிரியவிருத்தம்.

வாய்க்கவேசிறுதேக்கு வாய்விளங்கம் வால்மிளகு ரோகணியும் சுக்கோடேலம், சாய்க்கவே திப்பிலிஇலவங்கந்தான்றிக்கோலம்போல்த்தூக்காய் வகைவகைக்கு, மாய்க்கவேகால்பலமாய் நிறுத்துக்கொண்டு வண்மையாய்த்தூளிடித்துப் பாண்டத்திட்டு, காய்க்கவேஇருநாழிசலமும்விட்டுக் கடுகவேயெட்டொன்றாய்க்காய்ச்சிறக்கே, (௨௨௪)

இறக்கியேகொடுத்துவிடக் கிராணிமாந்தம் இயல்பான சுரக்கட்டிவிஷதோஷங்கள், உறுக்கியே இசிவுகண்டமாந்தத்தோடு உற்றதொருகிராணி சோகைக்காமாலை, நொறுக்கியேகொண்டசுரம் கோழைநக்கட்டு நொடிக்கின்ற கொட்டாவிவிம்மல்தும்மல் நறுக்கிவிடும்பித்தகணபாண்டுஎல்லாம் நமன்ஓடிப்போவான்பார் கியாழத்தாலே. (௨௨௫)

கர்ப்பமாந்தக்குணம் வேறுசந்தம்,

மொழிகிறேன் கர்ப்பமாந்தக் குன்றிதனை முயலக்கேளாய்
பொழிகிறேன்பெண்ணுள்தானும் புதுவாகரிசிக்கொழியல்
விழிகிறேமிதமற்றேதான் விளம்பரம்உண்டதாலே
கழியிளங்கருவுக்கேதான் கனல்தால்சூடுண்டாமே, (௨௨௬)

சூடதால்வாதவாயு தோன்றிடுங்குணத்தைக்கேளு
பாடதால்கருவிற்பற்றிப் பலபலநோய்தான்காணும்
வாடலோடுறுத்திவாயு வன்னியுங்கூடச்சேர்ந்து
தேடவேபிறந்தபிள்ளை தேகத்தில்நோயைப்பாரே (௨௨௭)

தேகத்தின்மேலேநோய்தான் சிலேஷ்மநாடிதானும்
ஆகத்தின்மூலச்சூடு அருகியேமிகுத்துதானால்
போகத்தால்புணர்ச்சிசெய்த பொருட்டால் சிசுவுக்கேதான்
நாகத்தின்இரைச்சல்போலே நடுக்கிடும்நாடிதானே. (௨௨௮)

நாடியில்வாதநாடி நடக்குமேசர்ப்பம்போல
ஓடியேசாசமொன்று ஓந்தியைப்போலேபார்த்தால்
வாடிடும்பிள்ளைதேகம் வாயெல்லாம்புண்ணாய்ப்போகும்
பேடியின்முலைப்பாற்சுண்டிப் பிள்ளையும்இளைக்குந்தானே, (௨௨௯)

பிள்ளையும்பிறந்திரண்டு ஆண்டதுசென்றுதானால்
கிள்ளையேஅணையிற்கட்டிக் கிலேசமாய்வாட்சிக்காணும்
விள்ளவேதேகமெல்லாம் மிகுந்ததோர்கனலினாலே
துள்ளவேபாலன்தானுந் துடித்ததோர்வீக்கமாமே, (௨௩௰)

துடித்திடும்வெளுக்குந்தேகம் தொண்ணூறுநாட்சென்றற்றால்
கடித்ததோர்விஷம்பட்டார்போல் கைகாலும்புண்ணாய்ப்போகும்
வடித்திடுஞ்சுழற்றல்வாய்நீர் வாண்டிடும்அதன்பின்நெஞ்சில்
தடித்திடுங்காறல்தானும் தலையதுநடுங்குந்தானே, (௨௩௧)

நடுக்குமேமுண்டுண்டின்மேல் நாடியும்அசந்திகாணும்
படுக்குமேபாயல்மீதே பாலதுகுடித்திட்டாலும்
எடுக்குமேவாந்தியாகும் இரைச்சலும்வயிறுநோயாம்
குடிக்கிறசாறமெல்லாங் குடங்கொண்டுபாயுந்தானே, (௨௩௨)

பாயுமேகறுக்கும்போது பசுமையாய்க்கொடிபோல்வீழும்
வாயுமேதவறிக்கண்கள் மதுவெனச்சிவந்துகாணும்
தேயுமேதேவாங்கைப்போல் செகத்தினர்சொல்லுவார்கள்
நோயுமேபட்சித்தோஷம் இதுவெனஅருளுவாரோ, (௨௩௩)

அருளுவோம்இந்தநோயின் அசாத்தியசாத்தியங்கண்டு
வருளுவோம்கர்ப்பமாந்தம் வல்பிணிவிட்டுநீங்க

வெருளுமேவாம்புங்கின்னெண்ணெய் விதமதைச்சொல்லக்கேளாய்
தெருளுமேவாம்மூன்றுநாழி திருத்தமாய்ப்பருப்பைவாங்கே (௨௩௪)

கர்ப்பமாந்தத்துக்கு புங்கின்னெண்ணெய்.

வாங்கிடுபுங்கன்கொட்டை அதனுடன்பருப்பைவாங்கி
தீங்கில்லாவிதம்மூன்று தினந்தினம்உலர்த்திநாளு
பாங்குடனெடுத்துஇந்த பருப்பையும்உரலில்தாக்கி
தாங்கவேஇடித்துமாபோல் தானதைபாண்டந்தாட்டே. (௨௩௫)

ஊட்டிடுதாணிநீரில் ஒருமையாய்ச்சொல்லக்கேளாய்
நாட்டினிற்கருடமூலி நன்னிலப்பனையும்அத்தி
சாட்டிடுசங்குசிங்னி சாரணைத்துன்றிவெள்ளை
மாட்டிடுகண்டங்காரி மாதளைநிலவேம்பென்றே. (௨௩௬)

வேம்புடன்குப்பைமேனி வில்வவேர்கீழ்க்காய்நெல்லி
காம்பதுஅழிஞ்சில்நாவல் கரிசலாங்கண்ணிதுத்தி
ஆம்பதுஆடாதோடை அல்லியுங்கொத்தான்றுறை
வேம்பதுசிவனார்வேம்பு வெண்ணொச்சில்துளசிவேரே. (௨௩௭)

வேருடன்வகையொன்றுக்கு விளங்கவேபலந்தான்கொண்டு
சீருடன்ரவியில்மூன்று நாளதுஉலர்த்திச்சேர
நேருடன்உரலில்தாக்கி நிலைபெறஇடித்துத்தூளாய்
கூருடன்தோண்டிவேறே குணமதாய்வடிதான்கட்டே. (௨௩௮)

கட்டியமாவைக்கொண்டு கருதிடுமுன்புநீரில்
அட்டிசெய்யாதேபின்பு அருளுமேவாபமூலச்சாறு
தட்டிடுபிரமிச்சாறு தைதவேளைஅவுரிதுரி
வொட்டியதும்பைக்காட்டு அகத்தியும்பொன்முசட்டை (௨௩௯)

அகத்தியும் மணித்தக்காளி அடவுடன் வகைவகைக்கு
தாகத்தியசாற்றில்வீதம் துரிதமாய்ப்பலம்இரண்டாம்
சுகத்தியமாகஇந்த சாறதைதீரிவிட்டு
அகத்தியம்இன்னஞ்சொல்வோம் அகத்தியன்உரைக்கக்கேளே (௨௪௰)

உரைக்கவேகடுக்காய்க்கண்டத் திப்பிலிச்செவியம்உற்ற
விரைக்கவேமதுராங்கோஷ்டம் வெட்பாலையரிசிகோலம்
நிரைக்கவேதேவதாரம் நிகழ்பெறுமாஞ்சில்சிங்கி
தரைக்கவேசாதிக்காயும் தான்றியும்ஏலமாமே. (௨௪௧)

ஏலமாம்புழுகுநாலும் இருவிகாவியுமேயாகும்
வாலரோசினையுமாகில் கஸ்தூரியன்பாய்வீதம்
ஞாலமேவகைவகைக்கு கனிமமாய்விதுகன்றன்று
சாலவேவாங்கியும் சட்டியில்வறுத்துக்கொண்டே (௨௪௨)

கொண்டுநீஇடித்துத்தூளாய்க் கொட்டிடுமுன்சலத்தில்
நன்றுநீசொல்லக்கேளு நவிலுவோம்கடைசரக்கு
வண்டதுவாளம்வீரம் மஞ்சளுந்கெந்தகநம்
துண்டறுபூரம்சாதி லிங்கமும்பூரமாமே, (௨௬௩)

பூரமுமுதலாய்வாங்கிப் புகலக்கேள்வகைவகைக்கு
நீமவேவருகன்நாலு திருத்தமாய்த்தூளாய்ச்செய்து
கூறநீவமுன்சலத்திற் கொட்டியேபின்புகேளு
ஆரவேபோடணக்கு அவ்வெண்ணெய்ப்படிரண்டாமே. (௨௬௪)

படியதுரண்டதாகும் பாங்குடன்நீரில்தாக்கி
வடிபெறமுன்னுகாரும் வன்னியம்விபில்வைத்து
கடிபெறஅடுப்பிலேற்றிக் காலாக்கினிமூன்றுசாமம்
துடிபெறகொதிக்கக்காய்ச்சி கண்டியேபடிரண்டாமே. (௨௬௫)

ரண்டதாம்பாகமானல் இறக்கியேஆறவைத்து
கண்டுநீவடிதான்கட்டிக் கலசத்தில்அடைத்தாக்கி
நன்றதாய்க்கமலம்வைத்து நாயகிப்பூசைச்செய்து
என்றிடும்நோய்தனக்கு எண்ணையைக்கொடுத்துப்பாரே (௨௬௬)

கொடுக்கிறவிதமேதென்றால் குழந்தைக்குஅதிகாலத்தில்
நடுக்கிறஎண்ணைதன்னில் நாலதுகழஞ்சுவாங்கி
துடுக்குடன்நவகாளுந்தான் துலங்கவேகொடுத்துசியும்
வெடுக்கெனஅதீதபத்தியம் விளக்கிடுங்குழந்தைக்கேளே. (௨௬௭)

குணக்குறிகுழந்தைப்பெற்றத் தாய்தனக்கென்னபத்தியம்
மணங்கமழ்பிர்க்கன்காயும் வறுத்தநேர்உப்புமாகும்
பணக்கலாம்வெந்நீராகும் போசனம்ஆறலாகா
விணங்கவேலவங்கப்பூவும் மிளகுடன்காயங்கூட்டே (௨௬௮)

கூட்டலாய்இருபோதன்னம் கொள்ளுடன்அகத்திக்கீரை
நாட்டவேடகையும்டோகம் நவையுலும்புளியும்ஆகா
தேட்டமாம்பெண்ணுள்தன்னை தெளியபத்தியந்தானசொல்லு
வீட்டைவிட்டுழலவேண்டாம் மிகுந்தநோய்சிதறிப்போமே. (௨௬௯)

போகுமேயெண்ணையுண்டுப் பின்புமேநவநாள்தன்னில்
ஆகுமேதேகவச்சம் அதீதமாம்பொன்போலாகும்
தாகுமேபத்யமாறி நாளதுசென்றுதானல்
வேகமேநீங்கிப்போகும் விளங்கொளிசடலமாமே. (௨௭௰)

சீர்மாந்தகுணம் அதிசலமாந்தம்

அறுசீராசிரியவிருத்தம்,

நளிர்த்துகுளிருஞ்சலிர்த்துவரும் நாவில்நீரும்ஒக்காளம்
கழிந்துவயிறுமிகப்பொருமும் கைகால்மெய்யுந்தினவெடுக்கும்
மெலிந்துஉடம்புமிகபருக்கும் மெதுவாய்ப்பேசும்வுணக்கமதாய்
தெளிந்து சிரிக்கும்சீர்மாந்தந் செய்குணங்களிதுதானே. (௨௫௮)

சீர்மாந்தகுணம் அதற்குசான்னை தன்வந்திரி

எழுசீராசிரியவிருத்தம்.

தலையதுநோவாய் முகமதுமினுக்குந் தவிக்கவேமலஞ்சிறுத்திட்டு முலையதுமுகவா துடம்பெலாங்குளிர்த்து மூத்திரங்குறிகடுத்திறங்கும், மலைமருந்திர உள்ளிமுக்குரட்டை வயங்குசா வெருவெவான்றேருர் உழக்காய், குலவிளக்கெண்ணை தனிலெரித்தருந்த கொடியசீர்மாந்த முங்குணமே. (௨௫௨)

சீர்மாந்தத்துக்கு வேறு ஔழதம்.

எண்சீராசிரியவிருத்தம்.

கொச்சியிலை வேளையிலைக்குப்பைமேனி துறைஇலையும் பேய்மிரட்டித்தும்பையோடு, பச்சிலையாய்க்கொண்டுவந்து வெதுப்பியேதான் பதமாயசாறுவரப் பிழிந்துக்கொண்டு, உச்சிதமாய்மிளகுள்ளி வசம்போடோமம் உகந்துவருமுதற்சாற்றில் அரைத்துக் காய்ச்சி, நிட்செயமாய்ப்பாலகர்க்குக் கொடுக்கவேதான் சீர்மாந்தம்போகும் சித்தன்முனிசொன்னரே, (௨௫௬)

சீர்மாந்தத்துக்கு வேறுயொழதம்,

தன்வந்திரி

அறுசீராசிரியவிருத்தம்,

மாந்தம்போகக்கருவேலி மகத்தாஞ்செவியங்கியாழமிட
வாய்ந்தமெரயும்சீர்மாந்தம் வணங்கியோடும்பண்டிதரே
நோய்ந்தஇதுதான்அறிவீர்கட் சொன்னமொழியுந்தப்பாது
வந்திழைநீர்இந்நூல்போல எவருஞ்சொல்லார்அறிவாயே. (௨௬௪)

சீர்மாந்தந்துக்கு வேறுஎண்ணெய்

எண்சீராசிரியவிருத்தம்.

பார்க்கவேவெதுப்பட்ட சிற்றம்மானின் பச்சிசிறிநரி துணசாணுக்கி, வார்க்கவேவவைாவைநக்குச் சார் படிகாலைாகும் வளமாக எண்ணெயதுநாழியொன்று, தீர்க்கவேவசம்புள்ளி மஞ்சளுந்தான் சே-

ர்த்துவகைக்கனைபலமாய்க் கூடக்கூட்டி காக்கடுகுத்திளக் காய்ச்சி றக்கிக் காண்டிபிடமூன்றுநாட்சலமாந்தம்போம், (உ௫௫)

நீர்மாந்தத்துக்கு வேறுஎண்ணெ.

நிலமண்டிலவாசிரியப்பா.

சீறியராட்சசன் சிறையினில்வைத்த
நாறிய நல்லிலை நாட்டிஉள்ளோரை
மீறியமிரட்டிலை வீறுடன்இரண்டுங்
கூறியஇதனைக் குணமுடன்நம்பே (உ௫௬)

எண்சீராசிரிய விருத்தம்.

நம்புவதுவெதுப்படக்கி காக்கைமல்லி நல்லிலையுஞ் சமனுகைச்சா றுவாங்கி, வெம்பியதோர் வேல்விழியாள்மீதுறையும் வேறுவெகுவா சமுடையோகி குதிரைப்பல்லன், துன்பமறநறுக்கிநெவாய்கழுஞ்சுவிதம் தூக்கிடுசாறெண்ணெசேர் சமனுய்சேர்த்து. தென்புடனேஎரியிவிடு மெழுகதாக தினமுமொரு காசெடையாய் குழுக்கிடாயே. (உ௫௭)

இதுவுமது வேறுபிட்டவியல்சாறு.

குழுக்கிடுவாய்முலைப்பாலில் மூன்றுநாளுங் கூப்பிட்டேயோடி விடுஞ் சலமாந்தந்தான், அலக்கமறும் பிள்ளை மாந்தளிர்போ லாகும் அதைவிட்டு இன்னமோரளவுகேளு, கலக்கமறதிப்பிலியு மிளகுநாளு ங் கனமானஇந்திலையில் பிட்டவியல்செய்து, நலக்காமல்திரிபொழுது வார்த்தாயானல் காடிவந்த சலமாந்தம் நடுங்கிப்போமே. (உ௫௮)

நீர்மாந்தத்துக்கு வேறுஎண்ணெ,

அறுசீராசிரியவிருத்தம்.

சிற்றாமணக்கெண்ணெப் பலம்பதிகழுமயூரம்விராகனென்று
வற்றுசுத்தித்தான்செய்த வளம்விறுகனெடைரண்டு
பற்றுவெள்ளைமிளகதுவும் பகரும்விறுகனெடைரண்டு
சற்றைகுழலாளேலவங்கம் கதித்தவிறுகனெடைரண்டே. (உ௫௯)

எடையேகொஞ்சம்எண்ணெயைவிட் டிதமாயரைத்தெண்ணெயிற்கல
கடையில்லாமல்ஒருகாண்டி தானேமூன்றுநாட்கொடுக்க [ந்து
கடைபோல்திறந்தசலமாந்தம் மாறிப்போகுமடவன்ன
நடையாய்ப்பொரிமுளகுக்கீரும் தல்லச்சாதமுண்டிடுமே, (உ௬௰)

விஷமாந்தகுணம்.

சிறியவன்வயிறிறைந்து சிதைத்திடும்உருட்டிப்பார்க்கும்
கருவுடன்பெற்றதாயார் கையினிற்றங்காப்பிள்ளை
அறிவுள்ளமேனிவாடி அரைக்கின்கிழ்குளிர்ந்திருக்கும்
வெறிபெனவெருவும்வேர்க்கு விஷமுள்ளமாந்தந்தானே, (உ௬௧)

வாந்தியும்வயிறுபோகும் வாகுசேர்விழியுஞ்சோரும்
மாந்தியேசோர்ந்துவீழ்ந்து வயிற்றிலேவலியுண்டாகும்
சேர்ந்திடுமலமுந்தானுஞ் சிக்கியேவயிறுபோகும்
ஆய்ந்திடும்நூல்வல்லோர்க்கேள் அதுவிஷமாந்தந்தானே. (௨௬௨)

சீறியபேபோல்வயிறிரையும் சிறக்கப்பார்க்குங்கண்சொருகும்
பாறிவயிற்றில்நோயதனால் பறந்துப்பிள்ளைஓய்ந்திருக்கும்
ஆறியாறிச்சுரங்காணும் அடுத்தவாந்திவயிறோடும்
தேரீர்இதுவிடமாந்தமெனச் செப்பீருலகிற்பண்டிதரே (௨௬௩)

விஷமாந்தத்துக்கு இயாழும்,

கூறும்ஓமம்பொடுதலையுங் குளிர்ந்தமஞ்சணத்திநொச்சில்
வேறுவேளைவேர்சமனாய் வெருந்தவுள்ளிவசம்பினோடு
ஆறநறுக்கிவறுத்ததனை அளவாய்க்காச்சியுண்டிடவே
பாரமானவிஷமாந்தம் பறந்தேயோடுங்கண்டாயே, (௨௬௪)

போர்மாந்தகுணம்.

போர்மாந்தத்தின்குணங்கேளு பொருமிப்பொருமிவயிறூழும்
மார்பைத்துடிக்குந்தலையசைக்கும் வயிறுவலிக்குமிகசோரும்
நேரோசத்தியுண்டாக்கும் நெற்றிநரம்புபுடைத்திருக்கும்
பாரோர்அறியபாலகர்க்குப் பரிந்தேயிதனைப்பார்ப்பாயே, (௨௬௫)

வாயுடன்நெஞ்சுலர்ந்து வயிறதுகழியுமாகில்
சாயவேயுடம்புசேர்ந்து சடுதியிற்பொருமிஊதும்
காயமும்வாடிதானுங் கட்களுமலர்ந்துமூடும்
மாயப்போர்மாந்தமென்று வகுத்திடுந்தெரியத்தானே (௨௬௬)

வெண்பா,

பொருமுங்கழியும் புரண்டுவலியுண்டாகும்
மருவிமுலையுண்ணு மயங்கும்—வெருவிமிக
சத்திசெய்யுங்கட்குழியுந் தாகமிகவெதும்பும்
வற்றியிடும்போர்மாந்த மாம், (௨௬௭)

அறுசீராசிரியவிருத்தம்.

ஏற்றேயிருந்துமிகக்கழியும் இடையிற் சுரமுந் தான்தோன்றும்
தோற்றும்உடலைத்தான் உருக்கும் தோன்றும்விலாவுமுதுகெலும்பும்,
வேறோர்உடலாய்சத்தியுண்டாம் மிகுந்தமலமுமேயொழிக்கும், கூற்
றணுகும்போர்மாந்தக் குணமிதுசுதற்குப்பொல்லாதே, (௨௬௮)

போர்மாந்தத்துக்கு மருந்து

வெண்பா,

தின்னசமதாகத்தைச் செவ்வறுப்பாய்த் தூளாக்கி
வெந்நீர்முலைப்பாலில் மேற்பொடியிட்டுண்ணப்
பொருமல்கழிச்சல் போர்மாந்தம்வாந்தி
ஒருநொடியிற்போமென் றுரை, (௨௬௯)

போர்மாந்தத்துக்கு வேறு மருந்து,

பாவட்டைக்கழல்கொடியும் பண்பாய் இவைமூன்றும்
போவெட்டிவேறும் பொங்கமாய் நீக்காட்டைப்
பாக்களவுவெந்நீரிற் பாலகருக்கீந்திடவே
போக்கும்போர்மாந்தமது போம், (௨௭௰)

போர்மாந்தத்துக்கு வேறு மருந்து,

கோழிக்கல்வீரற்கல் கூறுநற்சீரகமும்
தாழ்வில்லாஇலவங்கந் தானரையாய்த்-தோழீகேள்
பாலில்அரைத்துண்ணப் பாரிற்போர்மாந்தம்
வார்க்குமாந்தம்போமாம். (௨௭௧)

போர்மாந்தத்துக்கு வேறு மருந்து

அறுசீராசிரியவிருத்தம்.

உப்பைவறுத்துக்கொட்டியபின் உந்தாமணியுந்தும்பையிலை
செப்பானவெற்றிலையும் சோமனுய்வதக்கியபை ந
நுட்பமாகநீர்வாங்கி செடிபிற் கூனன்வசம்புரைத்து
அப்போதீயைப்போர்மாந்தம் அகலுமென்றேஅருளினரோ, (௨௭௨)

போர்மாந்தத்துக்கு வேறு எண்ணெய்

காட்டுமல்லிகைநுள்ளிக் கருஞ்சீரகமுங்கடுக்காயும்
நாட்டுக்கடுகுரோகணியும் நல்லவச்சிரப்பால்விளக்கெண்ணெ
கூட்டிஎரித்துப்பாலகர்க்குந் கொடுக்கமாந்தம்போர்மாந்தம்
ஓட்டிவிடுங்காண்இந்தெண்ணெ உலகோர்க்குண்டுசெய்துகொடே, ()

போர்மாந்தத்துக்கு வேறு எண்ணெய்,

எருஞ்சத்திச்சாரணைவேர் இதமாய்எண்ணெஓரழக்கு
தாறுகூனன்முசுகுன்னிந் தனித்தவசார்புவிருகனெடை
ஏல்அரைத்துப்பெண்ணையுடன் எரித்துபாலர்க்கீந்திடவே
சோருமாந்தம்போர்மாந்தம் சொல்லாதோடிப்போய்விடுமே. (௨௭௪)

போர்மாந்தத்துக்குஞ் சவலைக்கு வேறுமருந்து.

கூனன்முதுகுவசம்புள்ளிக் கூறும்ஓமம்நறுவேலி
மானேபொடுதலைவாரடையும் வளரும்வெற்றிலையின்காம்பும்
கானேகிரும்புகரிக்கியிட்டுக் காய்ச்சிச்சவலைப்பிள்ளைக்குந்
தானேகொடுக்கப்போர்மாந்தம் தங்காதோடிப்போய்விடுமே. (உஎரு)

போர்மாந்தத்துக்கும்வாந்திக்கும்வேறுமருந்து
எண்சீராசிரியவிருத்தம்.

வசம்புடனேமயிலிறகுசாம்பலாக்கி வசமாக வேப்பீர்க்கில்முலைப்பால்வார்த்து, கசமாகநறுங்கியதை பிழிந்துசற்றே காதலுடன் தேனுமொரு துளியேருக்கி, நிசமாகசீரகமுங் கிராம்புசேர்த்துநிண்ணயமாய் நிம்பவிரைப் பொடிமேல்தூவி, வசமாகமேவபருந்த மருந்தில்மாந்தம் வல்லைப்போர்மாந்தமொடு வாந்திப்போமே (உஎசு)

போர்மாந்தத்துக்கு வேறுயோகம்,
அறுசீராசிரியவிருத்தம்.

நொச்சில்சாற்கு நுணாயீர்க்கு நுவல்மாயீர்க்குப் புளியீர்க்கு
மிச்சமானவேப்பீர்க்கு மீறும்கொடிவேலியினீர்க்கு
இச்சைபொடுதலையின்கொடியும் இதமாய்வகைக்குறுபிடியும்
செச்சைப்பூண்டுதுட்டெடைதான் திப்பிலிதுட்டெடையொன்றுமே

ஆமேபாண்டத்தினிலிட்டு அப்புநாலுபடிவிட்டு
காமேநானாழபடியாக காய்ச்சியொருசங்கந்நிசந்தி
போமேமூன்றுநாட்கொடுக்கப் போர்மாந்தம்விட்டேபோகும்
தாமேஇச்சாபத்தியஞ்செய் சகலநோயுந்தான்போமே, (உஎஅ)

பால்மாந்தகுணம்,

கண்ணுக்குழியும்செவிநாழுங் கருத்துமயங்கிக்கோணமுமுண்டாம்
புண்போல்உதகந்நாவெந்து புளிந்தேகழியும்வயிறூறும்
பண்ணுர்மொழியும்பால்மாந்தம் பாரில்இந்நோதீரவென்றால்
அந்நாள்ஆவின்நெய்தனிலே அன்பாய்வைக்குந்திறஞ்சொல்வாம், ()

பால்மாந்தகுணம் அதற்கு ஔஷதம்
எழுசீராசிரியவிருத்தம்.

பாலனைதக்கழியும் பாலைதயெடுக்கும் பாதவித்திடும் பலவிதமாய்ச், சாலவேகாங்கால் வெதுப்பிடுங்குளிருந் தலையெடுத்திராமலேமய

ங்கும், சிலமாய்நாயார்வன்னமிருந்து திகழ்பொடுதலையின்காய் வறுத்துக். கோலஇந்துப்பு வசம்புள்ளிமிளகு கொள்சமன்கொடுத்திடகுணமே. (உஅய)

செரியமாந்தகுணம்,

அறுசீராசிரியவிருத்தம்.

மிக்கக்காய்ச்சல்தலைவலியும் மிகவேவயிறுநொந்தழுகும்
நக்கமலமாக்கரைத்தாற்போல் சாலக்கழிந்துகண்ணைக்கண்
நோக்கப்பக்கந்தான்படுத்து சோருங்கிரைத்தண்டதுபோல்
சிக்கென்றிலங்குமுகமாதே தெரியாமாந்தகுணமிதுவே, (உஅக)

செரியாமாந்தத்துக்கு கியாழம்,

ஆமேவசம்புசடாமாஞ்சில் ஆனைஉள்ளித்திரிகடுகு
பூமேஓமம்கருஞ்சீரம் புழுமுஆமையோடெல்லாம்
தாமேயிடித்துப்பொடியாக்கித் தண்ணீர்காய்ச்சிக்கொடுத்திடவே
போமேசெரியாமாந்தமெலாம் பலத்திட்டோடுங்கண்டாயே. உஅஉ

செரியாமாந்தத்துக்கு வேறுநெய்,

வேலிப்பரித்தியிலைவாட்டிப் பிழிந்துமிளகுவசம்புள்ளி
சாலஅரைத்துநெய்துளிவிட்டுத் தானேயருந்தகுணமாகும்
எலும்எருமைவெண்ணெயுடன் இசைந்தமருந்திறுடன்இஞ்சிக்
கோலங்கேளும்பெருந்தும்பைக் கூட்டியருந்திடகுணமாமே (உஅங)

செரியாமாந்தத்துக்கு உப்பலுக்கு வயிற்றுவலிக்கு
வேறு கியாழம்,

எண்சீராசிரியவிருத்தம்.

ஓமமுடன் கனக்கோஷ்டம் காசுகாலும் உயர்வசம்புங் கருக்கிட்டுக்கியாழமாக்கி, காமமுடன்அருந்திடவே செரியாமாந்தம் கழிச்சலுமேபோமென்றுக் கருதிச்சொன்னோம், ஓமமுடன் உப்பலும்போம்வலியுந்தீர்ந்து சதிருடனே உண்டதெல்லாஞ் செரிக்கும் பின்னை நாமுள்ளச்சொற்கேட்டு நாமுஞ்சொன்னோம் நலமாகும்புவியோர்க்கு நன்மைதானே. (உஅச)

கட்டுமாந்தகுணம்,

தாயார்முலையில்வாய்வைத்துச் சற்றேஉண்ணுந்திகைத்திருக்கும்
ஓயாதழுகைசிற்றிருமல் உள்ளேசுரமுமிகவுண்டாம்

சேயாமலைமுந்தசலங்கட்டிச் சிக்கப்பண்ணும்பசியில்லை
மாயாமசக்கும்இதுகட்டுமாந்தமென்றுவகுத்தனரே, (உஅ௫)

இதுவுமது-எண்சீராசிரியவிருத்தம்.

கொட்டாவிநலேநோயுமலம்போகாமல் குறுமேவர்வை வயிற்றுவலிக்குடலிரைச்சல், தொட்டாலும் உடலெங்கும் கனல்போற் காயுந் தூக்கமதுபோலிருந்துசோர்ந்துமாந்தி, பட்டாலே வயிறுமிகக் கழிந்திடாமற் பலநாளும்இப்படியே மலச்சிக்குண்டாம், மட்டார்குழல் மடவீர் கட்டுமாந்தம் வகையறியும்வாகடநூல் வல்லோர்தானே. ()

கட்டுமாந்தத்துக்கு-ஙியாழம் அறுசீராசிரியவிருத்தம்,

சிந்தில்தண்டுங்களிப்பாக்கும் சிவேதைவேருங்கடுக்காயும்
காய்ந்தசுக்குரோகணியுங் காயும்சீரிக்கொறுக்கவிட்டு
வந்துமுலையாய்இந்நீரை எட்டொன்றாக்கிக்கொடுக்கட்டு
மாந்தமாசுரமும்போம் வயிறுங்கழியுங்கண்டாயே. (உஅ௭)

கட்டுமாந்தத்துக்கு வேறு எண்ணை.

அடுமேசிற்றாமணக்கெண்ணை அளந்துக்கால்படிதானதிலே
கடுமேஅகத்திதுளசியுடன் கதிக்ததகரைகழற்கொடியும்
வடுமேநொச்சில்செம்முள்ளி மணித்தக்காளிச்சபருக
கொடுமேஇடித்துச்சார்படிகால் கூட்டிக்கடைசாக்கைக்கேளே.உஅஅ

இதுவுமது.

கேளேகடுகுரோகணியும் இளருங்கடுக்காய்ச்சீரகமும்
வேளைகரியசீரகமும்வெண்காயம்வெள்ளைப்பூண்டும்
பாளைவசம்பூதகரப் பாளின்பட்டைச்சாரவேளை
வேளைவிருகனைமுன்று இடித்துப்போட்டிவனம்பாரோ (உஅ௯)

இதுவுமது,

பாரோசதுரக்கள்ளிப்பால் பரிவாயொருநாண்டிக்கூட்டி
தாரோகாய்ச்சிவடிகொண்டு தனயர்க்கொருநாட்டெடைகொடுக்க
வாரோகழியும்அந்திதனில் மிளகுசாம்பலுஞ்சுக்கும்
நீர்வார்காய்ச்சியொருசங்கு நீயிடுகட்டுமாந்தம்போமே. (உ௯௰)

கட்டுமாந்தத்துக்கு வேறெண்ணெய்

எண்சீராசிரியவிருத்தம்.

* அடவியினில்திருடி * மலைவர்க்காலிப்பால் அவையெவ்வொன்றோருழக்களந்துகொண்டு, திடமுடன்ஆமணக்கெண்ணைநாழிகூட்டித் * திரிபலைவெள்ளுள்ளிவிராகனிடையிரண்டு, பொடிசெய்துபோட்டெண்ணைதலையெரித்துப் புகட்டுமோர் காசெடைமேல் விளாவிற்பூசத், தடமுடையக்கண்டுமாந்தங்கணபேதங்கட் சாரமென்றமைக்காளுர் சாற்றினாரே, (உ௯௧)

* அடவியில்திருடி-சதுரக்கள்ளி *மலைவர்க்காலி-வெள்ளாடு.
திரிபலை-கடுக்காய்-தான்றிக்காய்-நெல்லிக்காய்,

தலைமாந்தகுணம்-அறுசீராசிரியவிருத்தம்,

கைகால்குளிர்ந்துதாம்பொருமிக் கனக்கப்பார்வையுண்டாகி
மெய்தானேவேர்வைமுகத்திலெழும் விரைந்தேநவலிக்கும்பலவிதமாய்
பொய்யேப்பங்கொட்டாவியுடன் புண்போல்நாசிநீர்வடியும்
மைசேர்விழியாய்தலைமாந்தம் வந்தகுணமிதுகண்டாயே (உகூஉ)

தலையுங்கனத்துஉடலூதிச் சரீரந்தனிலேவெளியுண்டாம்
குலையும்வலித்துந்துள்ளிவிழும் குளிருஞ்சுரமும்வேர்வைவிடும்
அலைபின்புருவத்தலைமிரா சேஷ்டைமிகவேசெய்விக்கும்
மலையினுயர்ந்ததனத்தாளே வாதைப்படுத்துந்தலைமாந்தம் (உகூங)

தலைமாந்தத்துக்குமருந்தும் துவாலையும்

எண்சீராசிரியவிருத்தம்,

வெதுப்படக்கிப்பேய்மிரட்டித்துப்பைத்தானும் வேலியிலைவெள்ளறுகுவேரொடுள்ளி, மதிப்பசகுப்பியுடன் * தேசத்திப்பிலி வசம்புடனே ஓரெடையாய் வாகாய்க்கூட்டிக், கதிப்பவிவை நறுக்கியசாறுள்ளொக்கிந்து,காய்ந்தசலத்தேபிழிந்துக்கைகாலங்கங்கொதிப்புடனே வலிப்பகலுந் துவாலைசெய்யக் கூசாமல்தலைமாந்தங்குணமதாமே. ()

* தேசம்-தேசபுரம் ஷை இந்ததலைமாந்தத்துக்கு ஏலாதிமாத்திரைகொடுக்க மிகவும் நன்று.

துலைமாந்தகுணம் அறுசீராசிரியவிருத்தம்.

அடக்கிடாபெருகும்வாந்தி அதிகமாச்சுரமுந்தோன்றும்
முடக்கிடுமுகக்கடுப்பாய் மூரிகோட்டாவியுண்டாம்
விடக்குமேவலிப்பெடுக்கும் விரைவிரைத்திருக்கும்வேர்க்கும்
அடக்கிடா துலைமாந்தத்தை அறிந்துநீரடக்குவீரே (உகூரு)

துலைமாந்தத்துக்குக் காந்தாதிக்கியாழம் தன்வந்திரி

எண்சீராசிரியவிருத்தம்,

விரண்டோடக்காந்தாதிக் கியாழஞ்சொல்வோம் * மெய்யுதகம் * பெருமருந்து * சிற்றேரண்டம், பிரண்டோட * நரிமிரட்டிக் கொட்டான்சின்னி, மேலானகடுக்காயுமாசிபத்திரி திரண்டோட பற்படகந்தான்றிமுத்தம் திரிபாலைஅதிவிடையம் ஊசிப்பாலை, சுரண்டோடகுருக்கியிவை கொட்டிப்போட்டுக் கருநீவிதிலவேம்புப்பொஸ்தக்காயே

* மெய்யுதகம் சிறுநீர் * பெருமருந்து-ஈசுரமூலி * சிற்றேரண்டம் சிற்றாமணக்கு * நரிமிரட்டி கிலுகிலுப்பை.

இதுவுமது.

காயோடுபத்திரியின்தாளிசந்தான் கரியவேப்பிலை முத்தஞ் சிற்றுமுட்டி, ஈயேநதூளிடித்து அரணிற்போட்டு இரண்டுபடி தண்ணீர்விட் டெட்டொன் றுக்கி காயோடு * வயிரவனுங்கூடச்சேர்த்

துக்கடுக்கநீயெடுத்தீபகணசோகங்கள், வாயோடேபேசாமல்சர்வரோகம் வணங்கிபோயோடுமிதில் வண்மைப்பாரே, (உசுஎ)

* வயிரவனுாங்கூடச்சேர்ந்தென்பது - சிறுகிரையாறனும், வயிரவமாத்திரை - யிழைத்துக்கூட்டுக,

குலைமாந்தத்துக்கு-விரோசிக்க-வேறு-மருந்து-எண்ணெயும்.

பார்க்களவெண் * உயவைவேர் அரைத்துப் பாலையுடமூலைப் பாலில்கலந்தேயியே, தாக்கவேவயிறுபேதிக்கும்பின்புதயங்குளிகையெண்ணெயுடன் வசம்புவேனை, ஆக்கசொற்றன்*திரிபலையுங் * திரிகடுகங் தானும்*அங்கோலப்பொடியைப்போட்டெரித்துக்க, மூர்க்கமுடன் சந்துதலை நெஞ்சில்தேய்க்கமுறிந்தோடிப்போந்துலையின் மாந்தந்தானே

* உயவைவேர்-வெள்ளைக்காக்கணங்வேர்*திரிபலை-நெல்லிக்காய்-கடுக்காய தான்றிக்காய்*திரிகடுகம் சுக்கு-மிளகு-திப்பிலி - அங்கோலம்-அழிஞ்சில்.

சுழிமாந்தகுணம்.

துறப்புமிகும்காச்சலுடன்சுவாசந்தோற்றும் தாக்கமதாமிடியாதுதொங்கிக்காயும், இறைப்பெடுத்து விக்கலுடன்விலாவிற்பள்ளம் வந்துநெஞ்சை நக்குடியாது வீங்கிநிறபோல், வெறுப்பார்கள் சிறுவன் மேல் இனியேதென்பார் வேறேதேமனத்தவிக்க வேண்டாஞ்சொன்னேன், உறப்பானகுணங்களிது தானுங்கண்டால்இதுசுழிமாந்தமென்றுசொல்லே, (உசுஅ)

சுழிமாந்தத்துக்கு-எண்ணெய்.

சொல்லவே*சாலை*துழாய்*தொடைதும்பைத் தோகைகுழல் முடிப்பிலையுங் குறுகிநாதம், * வல்லியுடன்*சிட்டியுடன்*நறுத்தைகக்கூட்டி வாகானஇலையெல்லாஞ்சாறுவாங்கி, சொல்லுமே சாதிக்காய்திப்பிலிக்காயம் சேர்கடுகு ரோகணி*ரோசினையும்உள்ளி, வெல்லுதற்குவகைக்கழஞ்சு வெதுப்பிநசுட்டி வீறானஎண்ணெய்ச்சாமனையஞ் சேர்த்து, நல்லகமலாக்கினியில்மெழுகதாக்கி நாவில்வண்ணெய்க்கவெசுடைதான்காட்டிப்பாரே. (கா)

* சாலை கோடகசாலை*துழாய்-துளசி-தொடை-ஆடாதோடை* கோகைகுழல்முடிப்பிலை-முதியார்கூந்தல்*குறுக்கிநாதம்- சங்கிலை- வல்லி சிந்தில்*சிட்டி சிற்றிச்செடி * நறுத்தை-நறுந்தாளி - (இவ்வைத்திடியான் வந்தச்செய்யுள்)

சுழிமாந்தத்துக்கு-வேறு எண்ணெய்-தெறையர்-கலி விருத்தம்,

தாளும்சுருங்கிச் சாறுபோன் இளைத்தால்
கேளும்ஆமணக்கெண்ணெய்வகைக்குச்சேர்

சூளவேசுழிமாந்தமும் பலங்கொண்டிடில்
வாளவேசுழிமாந்தமும் நல்குமே, (௯௱௧)
இஃதென்றமொறுதொடர்.

வீக்கமாந்தகுணம்-அறுசீராசிரியவிருத்தம்

தப்புறுவீக்கமாந்தந் தன்னையேபன்னக்கேளு
கப்புறுநாதுங்கண்ணுங் கனக்கவேவீங்கும்வற்றும்
ஒப்புறுநாவும்புண்ணாய் ஒவ்விலாச்சுரம்உண்டாகும்
வெப்புறுகைகால்நொந்து வெறுத்திடும்அன்னந்தானே. (௯௱௨)
மாந்தவீக்கம் விஷவீக்கம்-விஷபாகவீக்கம்-சுரம்நீர்க்கட்டு - மலக்கட்டு-கியாழம்-எண்சீராசிரியவிருத்தம்,

பாடுவோம்பூவரசம்பழுப்புசங்கம் பட்டைசிந்திற்கொடியுந்துளசிசுக்கு, நீடுவோம்வாள்முள்ளிமுருங்கையீர்க்கு நீர்முள்ளிச்சாறுவேளையின்தன்வேரும், சூடுவோம்பிரமியிலைமருள்கிழங்குத் தூதுவளைச்சிறுகுறிஞ்சான் * சத்திமூலம், கோடுவோம் கருஞ்சீரம்இவைவகைக்குக் கொண்டு சமனளவையாக தாக்கிடாயே, (௯௱௩)

* சத்திமூலம் - சத்திச்சாரணைவேர்.

இதுவுமது.

தாக்கியேகியாழமிட்டுஎட்டொன்றுக்கிச்சுகமாகநல்கிறால் மாந்தவீக்கம், வீக்கிவிஷவீக்கவிஷபாகவீக்கம் மீறுசுரம்நீர்க்கட்டுமலக்கட்டும்போம், ஆக்கவேமுறையறிந்து செய்தால்நன்மை அல்லாட்டால் கர்மமம்வந்தெய்துமெய்தும் தாக்கவேபண்டிதரோ நூலைத்தேடி சாயுச்யமகியத்திற் சார்ந்திடரோ, (௯௱௪)

இக்கியாழம்-சிறியவர்க்கும் பெரியவர்க்குமாகும்

முக்குமாந்தகுணம் - அறுசீராசிரியவிருத்தம்,

அதுவாமுக்குமாந்தகுணம் அறியக்கேளுநிருக்கறவே
நிகமுங் * குழவிமுக்கிமுக்கி நின்றேகழியுஞ்சிய்மலமும்
புளியசுரமுமேலாடிப் பின்கால்வீங்கும்உழலையுமாய்
சதைதோல்எலும்புநரம்பிருக்க தழலாயுலர்த்திஉருக்கிடுமே, (௯௱௫)

* குழவி பிள்ளை

முக்குமாந்தத்துக்கு-கியாழம்

ஓமத்திப்பிலிமிளகுள்ளி * ஒடுங்கிஓமம்சமனாக
நாமச்சீலைதனில்முடிந்து * நாழிநீர்விட்டெட்டொன்றாய்
வாமம்காய்ச்சிமுன்முடிந்த மருந்தைஅவிழ்த்துதான்அரைத்து
தாமமூன்றுவேளைநல்க சகலமாந்தமும்போமே. (௯௱௬)

ஒடுங்கியோடு-ஆமையோடு-நாழி-படி-இம்- முக்குமாந்தத்திற்கு கஸ்தூரி-எண்ணெய்க்கொடுக்க-மிகவும்-நன்மை

வாள்மாந்தகுணம்,

தோலுந்திறங்கிஉடல்வெளுத்துச்சுழலுமார்க்கம்உண்டாகும்
பாலு * மெடுக்கும்மெய்யிளைக்கும் பார்க்கும்போது பலகுணமாம்
காலுங்கையுந்தான்வறளக் கடுப்பும்வலிப்புங்காண்பித்து
வாலர்தன்னை உருவழிக்கும் வாள்மாந்தத்தின்குணமிதுவே. (௧௱௭)

* மடுக்கும்-குடிக்கும்,

வாள்மாந்தத்திற்குக்-குளிர்ச்சி-எண்ணெய்,

* வட்சுண்டிச்சாறுவேளை மணித்தக்காளிக்கழற்சி
கரிசாலைத்துளசி * நீலிகண * சதம்சமனாய்க்கூட்டி
அரட்டியேஇடித்தச்சாறு அழக்குஒன்றாவின்னெய்தான்
ஊற்றியஒழக்கு உண்மையாய்க்கூடச்சேரே, (௧௱௮)

* வட்சுண்டி-ஆடுதின்னாப்பாலை-நீலி-அவுரி-*சதம்-இலை,

இதுவுமது,

கூடகஸ்தூரிமஞ்சள் கோஷ்டமுங்கரியசீபம்
வாடவேகடுகுரோணி வகைக்கவிருகன்கூட்டிப்
போடவேபொடிதான்செய்து புனிதமாகக்கலந்து
நாடவேஅடுப்பிலேற்றி நலமொடுகாய்ச்சிக்கொள்ளே, (௧௱௯)

இதுவுமது.

கொள்ளவேசத்திரன்னில் கொடுமேதுட்டெடைஉள்ளுக்குந்
துள்ளவேசகலதோஷஞ் சுருக்கினில்தீர்ந்துரத்தம்
உள்ளவேபாலிப்பிள்ளை உடலதுபருக்கும்பின்பு
எள்ளளவின்றிக்குளிர்ந்து இன்புடன்வளருங்காணே, (௧௱௰)

உப்பல்மாந்தத்துக்கு-மருந்து-கட்டளைக்கலிப்பா,

குப்பைமேனியும் உப்புங்கசக்கியே கொள்ளச்சாறொருசடைதானும். செப்பமாகுமேஉப்பலின்மாந்தமுஞ் சீக்கிரம்ஒருநாளினிற்றீர்ந்திடும், தப்பிறாலும்முட்காவேளைச்சுக்குடன்தக்கஓமம்வறுத்துத்தொண்டையிட ஒப்பிலாதொரு உப்பலின்மாந்தம்போம் ஓதினார்கள்உயர்தொழிலாளியே, (௧௱௧௧)

துட்டுமாந்தம்-கிருமி சுழிக்கணைதுட்காய்ச்சல்-நளிர்மாந்தம்,
பாலிக்கு-எண்ணெய்-அறுசீராசிரியவிருத்தம்

வெந்தவித்தூற்றுகின்ற விளக்கெண்ணெய்நாழிதன்னில்
அந்தகனாயினச்சாறும் அதுபடியேதான்ஒன்று
தந்தநாயுருவிவேரும் தைவேளைநாயின்வேளை
முந்தவே*கொழுஞ்சிவேரும் மூக்கரைசாறணையின்வேரே. (௧௱௧௨)

* கொழுஞ்சு-கொள்ளுக்காய்வேளை.

இதுவுமது.

வகைக்கொருஎலிமிச்சங்காய் அளவுசாந்தரைத்துக்கொண்டு
பகைப்பிலாவசம்புஓமம் பண்புகஸ்தூரிமஞ்சள்

மிகப்புடஞ்சரி * விளங்கம் மிகுவகைக் * கரையதாக
திகைத்தவெள்ளுள்ளிதானுஞ் சேர்த்திருபங்குகூட்ட. (௩௧௩)
* விளங்கம்-வாய்விளங்கம் * அரைதாக-பலம்அரையாக.

இதுவுமது,

கருஞ்சீரகமும்வெந்தயங் கடுகுரோகணிவகைக்கு
நிறுத்தெடுக்க * ஒருபங்காக நீர்விட்டுத்தான் அரைத்து
மறுத்தசட்டியிற்கலந்து வகையுடனன்றாயூற்றி
பெருத்திடுமெழுதுபாகம் பிழையறவடித்துக்கொள்ளே, (௩௧௪)
* ஒருபங்கு-ஒருபலம்.

இதுவுமது.

பிள்ளைக்குக் கனைஎண்ணெய்த் தானதுபுகட்டஅந்தப்
பிள்ளைதாய்தனக்குஉப்புக் கைப்புடன்தவிர்த்திட்டாற்கால்
தெள்ளியதுட்டமாந்தம் கிரியும்சுழிகணந்தான்
தள்ளிநவாயுட்காய்ச்சல் தளிர்மாந்தம்புரளிபோமே, (௩௧௫)

உளைமாந்தகுணம்-எண்சீராசிரியவிருத்தம்.

வஞ்சியேகருவாலே அறிந்துபாரு வண்மையுடன்வாயுகத்துக்குடலைப்பற்றி, மிஞ்சிமலஞ்சிக்கிக்கருசியதான மிகுந்தசலம்மலம்இரண்டுங்கட்டிக்கொண்டு, அஞ்சியேஅலறிஅழும்தேம்பித்தேம்பி அன்னையைமிகுதவெபறதேடுமெக்க, ஒருசிப்பால்உண்ணாது மிரண்டுபார்க்கும் உளைமாந்தக்குணமிதென்றுணர்ந்துக்கொள்ளே, (௩௧௬)

உளைமாந்தத்திற்கு-எண்ணெய்,

கொள்ளவேவியாதியென்றால் கொஞ்சமல்லக் கொடுங்காரம்ஏற்றுதற்குவகையைக்கேளு, விள்ளவேநிலவேருசிவயோகிவாளம் விளைவாணிம்பவா * உள்ளிககாயம், கள்ளவேஒன்றுக்குகழஞ்சுசேர்த்துக்கருந்துளசிவ எண்ணெய்அரைப்படியில்வெந்து உள்ளதொருநாளெடையாய் உள்ளேவாருஊறிஉளைமாந்தம் ஓடிப்போமே, (௩௧௭)
* நிலவேரு-நாகபூச்சி * சிவயோகி வசம்பு * உள்ளி-வெண்காயம்-காயம்-பெருங்காயம்.

உளைமாந்தத்திற்கு-வேறு-எண்ணெய்-தன்வந்திரி-வஞ்சித்துறை

உளைமாந்தெண்ணெய் *
துளசிறுநாகம் *
வள * பெருமருந்து *
தளிர்மருந்தே. (௩௧௮)
* பெருமருந்து-ஈசுரமருந்து

இதுவுமது-எண்சீராசிரியவிருத்தம்,

மருந்தானவசம்பு சீரகம்இரண்டும் மானே நாரத்தம்வேர் பூண்டுக்காயம், திருந்தானதிவைவகைக்குப் பலங்கால்வீதம் வீண்போ

காதக்காளிச்சார்விட்டாட்டி, குருந்தான எண்ணைசேர் அதில்கலக்கிக்குருவைபதாிக்கியமும போற்றிப்போற்றி, இருந்தானஅடுப்பேற்றிக்காய்ச்சிக்கொண்டுத் திறமையாய்க் காண்டிதினைமூன்றுநாளே. ()

இதுவுமது - வெண்பா,

மூன்றுநாள்வார்த்திடவே மூசியுளைமாந்தம்
ஊன்றிமுறித்தோடும் உண்மையே—மூன்றுளுள்
பத்தியந்தான்உப்புபுளி பாதையேயாகா
இத்தலத்திற்காணும் இது, (௫௨௰)

* இம்மூன்றுமொருதொடர்,

உளைமாந்தத்திற்கு-வேறு-கியாழம்-எண்சீராசிரியவிருத்தம்.

சங்கம்வேர்க்கொடிவேலி ஆடாதோடை தண்கொன்றைவேர் இந்துப்புடனேகாயம், பங்கிறுடைப்பட்டை இருநாழித்தண்ணீர் புகழ்பெறவேவார்த்துமுக்காய்க் காய்ச்சிக்கொண்டு தாங்கமிருகுழந்தைகட்குக்கொடுக்கவேதான் தொடர்ந்துநின்ற உளைந்தந்தீரும்தீரும், பங்கயப்பூவானவேல்விழிபருத்துப் பனைத்து புடைத்திறுகு தனப்பாவாய் செய்யே, (௫௨௧)

உளைமாந்தம்-உட்சுரம்-எலும்புருக்கிக்கு வேறுமருந்து.

அறுசீராசிரியவிருத்தம்.

* குருவிச்சிலையுள்கருப்புட்டிக் கூட அரைத்தென்னெண்ணையிலே
மருவிகுழைப்பிலிழுங்கவுளை மாந்தம்உட்சுரம் எலும்புருக்கி
உருவிதீருஞ்சொன்னபடி புணமைமயிதுதான் கண்டாயே
கருவிழிகொளங்காளே காலகாலைடைபணிவே. (௫௨௨)

* குருவிச்சி புல்லூரி,

அட்சாமாந்தகுணம்-எண்சீராசிரியவிருத்தம்,

நாடுமேஅஸ்தியிலேகூடுகொண்டு நல்லுடம்புகுளிர்ந்துசுரங்காயும்ஓயும், ஓடியதோர்சுவாசத்தால் அனல்புடைக்கும் உதடுகளும்வெடித்துவாய்புண்ணும்நெஞ்சு தேடிஅன்னைஅமுதவைப்பால் தூயசெற்றத்தேகம்பிவாய்திறப்பதற்கு அருமையாகி, வாடுமேசிறுவனுக்கு தேகமெல்லாம் வழும்புடனேபேதியக்சமாந்தமென்னே (௫௨௩)

அட்சமாந்தத்திற்கு - எண்ணெய்,

மாந்தையது காளிமுனி குமரிச்சார்சேர் வாங்குவது எண்ணைச்சேர்உள்ளிச்சாறும், சேர்ந்தகாரைப்பூலா துத்திவேர்கத்தோல் செயமெழுகுபோல் அரைப்பாய்பலமதாக, வாய்த்தகெருகு வெந்தயமும்பலமதாக வழுத்திடித்து ஏகமாய்க்கலக்கிக்கொண்டு சாந்தமாய்த்தெரித்துமெழுகுதாக்கிச் சாதகமாய்ப்புண்வாயில் தடவிவாயே, (௫௨௪)

பேய்மாந்தகுணம் அறுசீராசிரியவிருத்தம்,

இடிப்புடன்கைகால்நெற்றி * இம்முகம்விழியும்மூக்குப்
பிடித்திடும்பிடரிதன்னைப் பின்னித்தாள்நரம்பைப்பற்றி
வடிப்புடன்வலிப்பிழுப்பு வாயினால்நுரைநீர்வீழும்
படத்தகல்அல்குலாளே பாருபேய்மாந்தந்தானே. (௩௨௫)

* இமம்-பனி-இப்பேய்மாந்தத்துக்கு வல்லாரைநெய்கொடுக்க மிக நன்மை,

பட்சித்தோஷம்-மாந்தம்-சுழிமாந்தம்-வயிற்றுப்பிசம்
கணம்-நாவரட்சி-காய்ச்சல்-குளிர்தொந்தசுரம்-முக்கு
க்கணம்-பால்கிறிச்சினம்-இவைகட்கு- கஸ்தூரி
எண்ணெய்-கலிவெண்பா.

ஏகநாயகன்றன் இணையடிப்போற்றிசெய்து
வாருடனேயென்னை வசனிப்பேன்—யோகமுள்ள (௩௨௬)
கோரோசினையும் கோஷ்டம்அதிமதுரம்
சிறந்திப்பிலி தேவதாருமுடன்—போன (௩௨௭)
சந்தனமும்யேலம் தன்னுடனேமாசிக்காய்
வெந்நயமுஞ்சுக்கு வெள்ளுள்ளி—அந்தமுள்ள (௩௨௮)
போனகஸ்தூரிப் பெருவசம்புகோரகணியும்
பாரமுள்ளமூங்கில் பச்சைத்தோல்—சீராய் (௩௨௯)
வகைக்குவிராகனெடை வாடநிறுத்துவறுத்துத்
தொகையாய்அரைப்பதற்கு சொல்லக்கேள்-தகைமையுடன் (௩௩௦)
எருமுட்டைப்பீநாறி இசைந்தகொருக்சாற்றில்
வருநதிஅரைத்து வழித்ததனைத்—திரும்ப (௩௩௧)
விளக்கெண்ணெஓர்படியும் விட்டெறித்துத்தான்இறந்து
மலைக்காமல்நோய்க்கெல்லாம் வைப்பாய்—மலக்கமற (௩௩௨)
பிள்ளைப்பிணிக்குப் போகதான்கொடுக்க
உள்ளநோய்போகும் ஓதக்கேள்—கள்ள (௩௩௩)
மாந்தவயிற்றுப்பிசமும் வடிவாய்இளந்தேகம்
சோர்ந்துகிடக்கும் சுழிமாந்தம்—கார்ந்தும் (௩௩௪)
நாவரட்சிக்கணமும் நளிர்காய்ச்சலுங்குளிரும்
தூவிஇரந்த தொந்தசுரம்—மேவும் (௩௩௫)
முக்குக்குணமும் முதிர்ப்பால்கிறிச்சினமும்
பட்சியின்தோஷம் பழங்காய்ச்சல்—அக்கணமே (௩௩௬)
இத்தனைநோயெல்லாம் இருப்பிடத்தைவிட்டுவிட்டு
சுத்திவிழுந்தோடுங் காண். (௩௩௭)

பதினெட்டுமொந்தத்துக்கும் சாதிக்காயெண்ணெய்

எண்சீராசிரியவிருத்தம்.

சாதிக்காய்சாதிபத்திரிகிராம்பு ஏலம் தருகோஷ்டம் அதிவிடையம் குங்குமப்பூ, போதிக்கு அதிமதூரம் * பஞ்சமூலம் பொற்கடுக்காய்த்தான்றிக்காய் மாசிக்காயும், ஓதியநாற்கரியசீரகம் * தக்கோலம் உயர்வானகுராசாணிஓமத்தோடு கோதில்லாசதகுப்பைச்சித்திரமூலங்கூறுவகைக்கே யிரண்டுவிருகன்கூட்டே, (௩௩௮)

* பஞ்சமூலம்-கண்டுபாரங்கி - சித்திரமூலம் - சுக்குசெவ்வியம்* போரத்தை*தக்கோலம் - வால்மிளகு,

இதுவுமது,

கூட்டியேஓமமது விருகன்ஐந்துக் குணமான வசம்பதுவும் விருகன்ஆறு மாட்டியேவசம்பைச்சுட்டுச் சாம்பலாக்கி மற்றமருந்தெல்லாஞ்சூரணமேசெய்து, காட்டியேகணைப்பூண் டிண்டங்கொழுந்துக் கணத்தைப்பழம்பாசி இலந்தங்கொழுந்து, நாட்டியேநுணாஇலைநாவற்கொழுந்து நல்லவிடத்தாரையிலைக் கருவேலாமே, (௩௩௯)

இதுவுமது கலிவிருத்தம்,

ஆமேசங்கிலை ஆங்*கழலின்கொடி
தேமே*வட்டத்திருப்பிக்*காந்தையும்
தோமேபாச்சோற்றிப் பேயின்பாச்சோற்றியும்
பாமேநல்லப்*பகன்றையும்ஆகுமே. (௩௪௦)

* கழல்-களச்சி*வட்டத்திருப்பி-பங்கம்பாலை-காந்தை- விஷ்ணுக்காந்தை*பகன்றை-கிலுகிலுப்பை.

இதுவுமது எண்சீராசிரியவிருத்தம்.

ஆகுமேசடைச்சியிலைக்குதிரைவாலி அழுகுசிறுபுள்ளடியும் கண்டங்கத்ரி, சோகியொடுசெருப்படையும்துளசித்தும்பை சுயகோழிஅவரையுடன் ஆடாதோடை ஏகுமேவல்லாரைப் பொடுதலையும்வேளை எடுதவசிமுருங்கைவராப்பூலாபத்ரம், பாகுமேஇலைகளெலாம் இடித்தசாறுப் படியொன்றுஉப்பிலிவேர்பெருங்கிழங்கே, (௩௪௧)

இதுவுமது.

கிழங்கானபூதகராப் பான்தன்பட்டைக் கெடியானவாதகாப்பான்தன்பட்டை, முழங்கானதிருநீற்றுப் பச்சைவேரும் முக்யகருவேப்பிலையின்ஈர்க்குநாலும், வழங்கானவகைக்குக்கால்பலமேவாங்கி வகையாகச்சூரணித்து முன்மருந்தில்சேர்த்து, குழம்பானசாறுஞ்சூரணமுமொன்றாய்க்கூட்டியே விளக்கெண்ணெய்ப்படியில்தாக்கே. (௩௪௨)

இதுவுமது.

தாக்கியேமுலைப்பால் ஓர்அழக்குவிட்டுத் தண்மையாம் பக்குவமாய்க்காய்ச்சிக்கொண்டு, தேக்கியேகண்டியளவைந்துநாளுந்திறமையுடன் கொடுத்துபத்தியம்காப்பாயாகில், தாக்கியே*ஈரொன்பான்மாந்தந்தீரும் துடியானகணம்எட்டுந்தீர்ந்துபோகும், நீக்கியேபெரியவர்க்கேழ்நாள்கொடுக்க நீள்மேகம்கிரந்திபெல்லாந் தீருந்தானே, (௱௪௩)

சகலமாந்தத்திற்கும்மாத்திரை புலிப்பாணி,

நான்இனிதான் இன்னமொன்றுசொல்லக்கேளு நயமானவில்வவேர் விளாவின்வேரு, மானவேநாய்வேளைக் கஞ்சாங்கோரை வண்மையாய்ச்சின்னியொடு காட்டுமொச்சை, தேனானதிருநீற்றுப்பச்சைத்தும்பைத் தெளிவானசிறுதும்பைக் கண்டங்கத்ரி, வானான அமுக்கராசங்கங்குப்பி வளமானநுணாவேலிப்பரித்தியாமே, (௱௪௪)

இதுவுமது.

ஆமேநீ முடக்கொற்றான் வெண்காய்வேளை அடவானசாறணையுமுட்டைநாறி, தாமேநீகொழுஞ்சிப் புண்ணாக்குப்பூண்டு தயவானபிரமியொடுசித்திரமூலம், வாமேநீகொவ்வையுடன் மணித்தக்காளி வகையானகையானுங்கிழ்க்காய்நெல்லி, போமேநீஇந்தவகைவேர்கள்தானும் புகழாகக்கஞ்சநிறைபிலமாய்த்தூக்கே, (௱௪௫)

இதுவுமது.

தூக்கியேவசம்புடனே*ஓமஞ்சுக்கு துன்பமிலாசதகுப்பி* திரிபலாதி. ஆக்குடையதேசபுரம் *அத்தித்திப்பிலி அரத்தைகருஞ்சீரகமுங்காட்டுச்சீரம், போக்குடையபுதிவாலுமுவைதானும்பொங்கமுடன்பொன்தகக்காய்ப் புரசங்கொட்டை, தாக்குவாய்வகைவகைக்குக் கழஞ்சுதூக்கிச் * சாணாங்கிச்சாற்றினால் அரைத்திடாயே, (௱௪௬)

* திரிபலாதி-கடுக்காய்-தான்றிக்காய்-நெல்லிக்காய் * அத்தித்திப்பிலி-ஆனைத்திப்பிலி * சாணாக்கி-ஜனகிபூண்டு.

இதுவுமது,

அரைத்திடுவாய் * அப்பைச்சாரணையும்வேளை, அழகானஅகத்திச்சாறிண்டஞ்சாறும், துரைத்திடுவாய்இருசாமம் மயனம்போலேதுடியுடனேதான்அரைத்திருபங்காக்கி, விரைத்திடுவாய்த்துவரையைப்போல் உருட்டிப்போடுவிதமாகஒருபங்கில் விபரங்கேளு, இரைத்திடுவாய்சுத்திசெய்த வாளந்தானும் இதமானகடுகுரோகணியும்பாரோ;)

* அப்பை-அப்பைக்கொவ்வை

இதுவுமது.

பார்க்கவேவகைவகைக்குக்கழஞ்சுதூக்கிப் பாங்காகமுன்மருந்தில்ஒக்கச்சேர்த்து, வார்க்கவே அகத்திச்சார் * நிலவாகைச்சார் வள

மாகவிட்டரைப்பாய் சாமம்மூன்று, வேர்க்கவே துவரையைப்போல் உருட்டிச்சேர்த்து விதமாகநிழல் உலர்த்திஎடுத்துக்கொண்டு நேர்க்க வேகுழந்தைகள்தன் பிணிகட்கெல்லாம் நிசுதயமாய்த்தான் கொடுக்க த்திரும்பாரே, (௩௪௯)

இதுவுமது.

பாருநீஅப்பைச்சார் நாய்வேளைச்சார் பண்பானதுளசிச்சார் சிறுதும்பைச்சார், விருநீஎருமுட்டைநாறிச்சாறும் விதமானகாட்டு மொச்சையிலையின்சாறும், சேருநீவயிறுகட்டிப்பிணிகட்கண்டால்செயலாகும் முன்குளிகை செலுத்திப்போட, திருநீஇச்சாற்றிலேதிலாறும் திறமாகத தான்கொடுக்கத்திரும்பாரே. (௩௫௰)

இதுவுமது.

நீருமேமாந்தத்தின் வகைகள்யாவும் திறமானதோஷமொடுவலிப்புக்காச்சல், ஆறுமேஅக்கினியின் மந்தந்தானும் அன்பில்லாஅநேகவிதநோய்கட்போகும், கூறுமேசிசுவருத்தந்தீர்த்தோர்க்கெல்லாம் குற்றமொன்றும்வாராது வறுமைநீங்கும், வீறுமேபோகருடகடாக்ஷத்தாலே விதமாகபுலிப்பாணிப்பாடினேனே, (௩௫௰)

இவ்வேழுமொருதொடர்.

உரம்விழுந்தால்முடுகுதைலம்தன்வந்திரிஅறுசீராசிரியவிருத்தம்,
இல்லாப்*பூண்டுப்பலம்பத்து இனிவனக்கடுகுபலம்பத்து
கல்லாக்குழிதைலஞ்செய்துக் கடுகெடுத்துப்பதபடுத்தி
பொல்லாநோய்கட்குடல்வாதம் போதும்போதும்துவாலையிட
வல்லாப்பிள்ளைஉரம்வீழ்ந்தால் வலைபோல்பூசஉரம்விடுமே. (௩௫௧)

* பூண்டு-வெள்ளைப்பூண்டு.

மாந்தவகுப்பு-முற்றிற்று,
இனிகணம் வருமாறு
அகத்தியர் திருவடிகளேசரணம்.



அகத்தியர் திருவடிகளேசரணம்.

இ ஃ து

கணவகுப்பு.

கணம்வருமாறு அறுசீராசிரியவிருத்தம்,

ஐயதுகூடித்தென்றால் அறிவையர் துயரந்தன்றால்
செய்ய * பர்புனலருந்தி செரிசலதோஷந்தன்றால்
பையரவல்குலாளும் பசியுடனிருந்ததாலும்
துய்யதோர்குழவிகெட்டுக் கணங்களுந்தோன்றுமென்றே, (௩௫௨.)

* சேஷ்மம்*பற்புனல்-பலநீர்

கணங்களின் தொகுப்பு எண்சீராசிரியவிருத்தம்,

கணங்கட்பேர் விரித்துரையக் கேளுகேளு கனவாதகணம் பித்தக்கணங்குளிர்ந்த மணமானசேஷ்மகணம் பிளவைகட்டு, மாந்தகணம் அதிற்பிரிவுஐந்தாம்இப்பால், துணமாநீர்க்கணம்பிகாவிந்கணமும் நல்லச்சூலிகணஞ்சுழுகணமஹாகணந்தான், குணமானஊதுகணம்வரட்கணந்தான் கொதிப்புகணம் விக்கணம் இன்னங்கேளே, (௧௫௩)

இதுவுமது.

கேளேநீபிறக்கணமும் அந்தகன்தன் கணமும்மந்தார கணம்எரிகணந்தான். மூளேநீராமகணம் ஆமகணமெற்ற முக்கணம்மூலகணம் போமத்தின், வாளேநீகணம்இரத்தகணமாம் எல்லாம் வகுத்துரைத்ததிருபஃதுமூன்றுமாக. கோளேதுஇதுதானேஆயுர்வேதக் குறிப்பறிந்தார்க் கல்லாமலமற்றோர்க்கேதே, (௧௫௪)

வாதகணத்தின்குணம் அறுசீராசிரியவிருத்தம்,

வாதகணத்தின்குணத்தியல்பை வகுப்போம்உடலும்பாரமதாய்
போதஇரைக்கும்நாவாளும் புகைந்தேஇருமுந்தாகமுடன்
பாதவரைக்கும்சூரங்காயும் பசியும்எடுக்காமலங்கருகும்
பேதமாகநீர்ச்சுருக்காம் பித்தகணத்தின்குணங்கேளே, (௧௫௫)

பித்தகணத்தின் குணம்,

கேளேபித்தக்கணத்தியல்பைக் கொடியாய்உடலும்எரிச்சலுண்டாம், நாளேஉலர்த்திமார்பிடிக்கும் நாக்குங்கடைவாய்ப் புண்ணாகும், பாளேசுரமுங்காய்ந்தெரிக்கும் பருக்கக்கழியும்மஞ்சட்போல், தாளேமயக்கும் தலைகிறுக்குங் காற்றுஞ்சேஷ்மகுணங்கேளே (௧௫௬)

சேஷ்மகணத்தின் குணம்,

குணமாஞ்சேஷ்மகணத்தியல்பைக் கூறக்கேளுஉடலமெலாம்
உணவாய்திணவுமெடுத்துசொரி ஊறிக்காக்கால்வீக்கமதாம்
மணவாய்நாறும்வெடிப்புடனே மார்பிற்கோழைஇருமலுடன்
* அணமேவெடித்துப்புண்ணாகும் ஆறுதவனமிகுந்திடுமே. (௧௫௭)

* அணம்-கீழ்வாய்மேல்வாய்புறம்

கணத்தின்குணம் கூறுகின்றார்.

மாந்தமுதிர்ந்துசுழிக்குங்கோ வயிறுநொந்துநாவெந்து
வந்தும்எதிரேமுச்செறிந்து இருமவிருமிசத்திக்கும்
போந்தஉடம்புபலவிதமாய் பொறுத்துபொருத்துச்சுரம்உண்டாம்
காந்தள்மலர்போல்கரமுடையீர் கணத்தின்வகையொன்றுரையீரோ, ()

* கோ-கண்-சத்தி-உவந்தி

இதுவுமது.

விழிசிறப்பேறுகாரும் வெறிக்கதுஉருட்டிப்பார்க்கும்
குழிவிழுந்துச்சிக்தாழ்ந்து குணுகுணம்பலவுஞ்செய்யும்
மொழிவது * மிடறுகம்மி முரங்குறுமேவர்வைஉண்டாம்
கழிவதுவயிறுகாய்ந்தால் கணமெனக்கருதுவாயே (௬௨௫௪)

* மிடறு-தொண்டை.

இதுவுமது,

சிதாக்தமாய்க்கழியுந் திரும்பக்கெட்டப்பால்போலே
பேதங்கறித்தண்ணீரதுபோல் பின்னுங்கழியும்வயிறுப்பும்
ஏதங்கைகால்முகங்கருகி எரிந்துகுளிர்ந்துவெதுப்புண்டாம்
கோதேஇருமலுண்டாகுங் குறிதான்அறியுங்கணங்கட்கே. (௬௫௫)

எண்சீராசிரியவிருத்தம்,

நடுங்கியதோர்பித்தமது கோபங்கொண்டு நல்லவாயுவைப்பற்றி அழுந்திக்கொள்ளும், கடிந்திருங்கபிள்ளைக்குக் கதித்தச்சூடு கனகனப்பு எந்நேரங்கைவிடாது ஒடுங்கியேவாயுலர்ந்து தண்ணீர்கேட்கும் உண்மையாய்மலபேதி வழும்பாய்வீழும், மடங்கியேஊன்றுமுனிர் அபானவாசல் மாறுமல்எப்போதும் வருகும்பாரே, (௬௫௬)

இதுவுமது-தன்வந்திரி,

அறுசீராசிரிய விருத்தம்.

பாரேகணத்தைப்பகரக்கேள் பகரும்உடம்பில்சுரம்வீசும்
பாரேஉட்சுரமிதுதானே பகருங்கணம்மலம்உட்சேரும்
பாரேமார்புகூண்டெழும்பிப் பதமாய்தேகம்மிகவற்றிப்
பாரேவாயும்மிகநாறும் பதமாய்மலமும்வெட்டையென்றே. (௬௫௭)

மலமும்சலமும்மிகத்தீய்ந்து மார்பில்அதிகசுரங்காயும்
மலமும்வயிறுமிகஎரியும் வளமாய்த்தலையுமிகமயக்கும்
சலமுவாள்தீதான்குறையும் சண்டாளம்போல்உட்சுமும்
தலமேபன்னிரண்டாண்டுமட்டும் தனதாய்வருகுங்கணமிதுவே, ()

* இவ்விரண்டுமொருதொடர்,

கணத்துக்குஎண்ணெ எண்சீராசிரியவிருத்தம்.

பாருநீஇக்குணத்தால் கணங்களென்றுப் பறியாகக்கண்டறிநீ புத்தியாக, சாருநற்குக்குமிழ்வேரு * சித்திரபாலை காரக் * தருக்கன் * காந்திவேர் * பொன்னும்பூவேர், பேரான * மதியங்கிக் கணைபூண்டுவேரும் போதாவாய்ப்பட்டைவகைப்படியோலுக்கு மீறிஅதைமெழுகதுபோல் எண்ணெகாழி வெந்தபின்புமீங்காணி ஒழுந்துவையே.

*சித்திரப்பாலை சிறுஅம்மான்பச்சரிசி *அருக்கன் எருக்கு* காந்தி * விட்டுணுக்காந்தை * பொன்னும்பூவேர் ஆவாரைவேர் * மதியங்கி கொன்றை.

இதுவுமது,

இறுத்திட்டஎண்ணெய்க்குப் பொடியைச்சொல்வேன் ஏலம் சிறுகம்அதிமதுரம்பலமேவாங்கி,வறுத்திடித்துப்பொடித்திடுவாய்மயனம்போல வாரிஎண்ணெமேல்தூவி குலுக்கிவைப்பாய், நிறுத்து ஒரு காசெடையாய் மூன்றுநாள்தான் நோாகமுலைப்பாலில்கலந்துவாரு, துரத்திவிடும் அபானத்தால் சொரிந்தரத்தந் தோற்றினதோர் கணமெல்லாந்தூரப்போமே. (௬௪௫)

கணத்துக்கு வேறுஎண்ணெ தன்வந்திரி,

* கிணமான குணமிதற்கு மருந்துசொல்வேன் கிரிமையென்றவல்லாரைமாசிபத்திரி, கணமானவில்வமொடுவிளாவின்சாறும் கடியானஅத்திப்பால் ஆலம்பாலும், திணமான உள்ளிச்சார் * நிம்பச் சாறும் திறமானமுலைப்பாலும் ஆவின்பாலும், கிணமானஆவின்நெய் வெள்ளாட்டின்பால்கேள் சிவந்தகொம்புத்தேன் கோவ்வைச்சாறே, ()

* கிணம்-கணம்-தசவாயு-திசவாயுவென்பதுபோன்மருவியது

* நிம்பம்-எலுமிச்சம்பழம்.

இதுவுமது,

சாறிதெல்லால் வகைக்கிப்படி அரைதான்வாங்கி சமர்த்தானதென்னங்காய்ப்பாலுநாழி. சாறிதெல்லாம் ஒருசட்டித் தனிலே யூற்றிச்சாதிக்காய் சாதிபத்திரி ஏலம்கிராம்பும், சாறிலே * திரிகடுகு * திரிபலாதி சடாமாஞ்சில் அதிவிடையம் மாசிக்காயும், சாறிலேவகைக்குபலம் ஒன்றுவாங்கிச் சன்னமாய்த்தூளிடித்து வைத்துக்கொள்ளே. ()

* திரிகடுகு-சுக்கு-மிளகு-திப்பிலி * திரிபலாதி-கடுக்காய்- தான்றிக்காய்-நெல்லிக்காய்.

இதுவுமது.

வைத்துக்கேள் சந்தனத்தூள் அறுகங்கட்டை வலுவான வெட்டிவேர் விலாமிச்சோடு, கைத்திறமாய் இடித்துவகைப்பலந்தான்வாங்கிக் கால்படிதான் நீர்அதிலேயிதனைப்போட்டு, வைத்துப்பார்க்கியாழமதுபாதிவாங்கி மகத்தானசாறிலே யொன்றாய்வார்த்து, வைத்துப்பார்அடுப்பேற்றிஎரித்துமேதான்மச்சமாய்சீர்சுண்டிநெய்போலாமே.

இதுவுமது,

நெய்போலாம்பதத்திலே மருந்தைக்கொட்டி நேசமுடன் பூரணமாய்க்கிண்டிக்கிண்டு, நெய்போலாங் குழம்பாகும்பதத்தைக்கண்டு நேசமாய் இறக்கிவைத்து தேவிதன்னை, நெய்யென்ற வாலையைத்தான்

போற்றுப்போற்று நினைவாகலட்சமுரு. நீ.நான்ஐது, நெய்யான நெய்யிதுநான் வலுந்துப்போச்சுகிரில்லாசஞ்சீவி இதுதான்பாரே. ()

இதுவுமது,

பாரேதான்கமண்டிநினை மண்டலமேகொண்டால் பாழான முன்சொன்ன கணமெல்லாம்போம், பாரேதான்வாரத்தால் எழுந்தநோய்கள் பன்னிபன்னிஒடுமே பின்பாருமல், பாரேதான் புளிகசப்பு வாதபண்டம் பாற்றறவுமாகாது தள்ளிப்போடு, பாரேதான்தேரை கணம் தேரைப்போலே பழுதில்லையெட்டாண்டு மட்டுண்டாமே, (௯௭௰)

இதுவுமது.

உண்டாகும் அந்நோய்க்கு இந்தநெய்யை உற்பனமாய்க்கொடுத்துவிடு பறந்துப்போகும், உண்டாகும் வாதபித்தசேஷ்மமூன்றும்ஒடுங்கியே மூலத்தில்கணமேயாகி, உண்டாமே உறுதியற்றிக் கமலமெல்லாம் ஐஐஜ புண்ணுபுட்சுமும்வீசும், உண்டாமே உடம்பிளைக்கும் பித்தவெட்டை உத்தமமாய் எரிகுன்மம் உயர்ந்துப்போமே, (௯௭௧)

இதுவுமது,

உயர்ந்துபோம் தாதுடைந்து தேகம்பாழாம் உற்பனமாய்அன்னாசம் அற்பமாகும், உயர்ந்துப்போம் * முப்பத்திரண்டாண்டுமட்டும் விட்டுவிடாதிந்தகணம் ஒஜபாரு, உயர்ந்துப்போம் ஆறுண்டுபிறுயமட்டும் உறுதிபடும்முப்பத்திரண்டிற்குள்ளே, உயர்ந்துப்போம் இந்நோய்க்குஇந்நெய்யைத்தான் உட்கொள்ளமண்டலத்தின்ஓடிப்போமே

இதுவுமது,

ஓடிப்போம் பத்தியந்தான் இச்சாபத்தியம் ஐஜஜ நெய்யினுடஅதிதமெற்ற, ஓடிப்போம் கணரோகம் தேரைக்கூறும் உயர்ந்தகணம் இந்தநெய்யில் அயர்ந்துபோகும், ஓடிப்போம் இந்தவகைஆருஞ்சொல்லார் ஓங்காரப்பித்தத்தின் அதிதம்போக்கு, ஓடிப்போம் யான்உரைத்தேன்எவருஞ்சொல்லார் உத்தமியாள்அம்பிகைதன் அதிதம்பாரே,(

கணத்துக்குவேறுகுடிநீர் - கலிவிருத்தம்.

வில்வபத்திரி அத்திவெண்காயமும்
நல்லவெந்தயம் ஒக்கநன்றுய்வரு
வல்லநல்லநீர் வார்த்துப்பின்சீரகம்
சொல்லக்காய்ச்சி கொடுகணஞ்சோருமே. (௯௭௪)

கணத்துக்கு வேறுசூரியபுட நல்லெண்ணெ

அறுசீராசிரியவிருத்தம்.

சிறுபுள்ளடியுங் கழல்கொழுந்து சிறந்தஅவுரிசாறுங்கி
நறுங்கனபொடுதலை ஒருபிடியும் நையநறுக்கிநல்லெண்ணெ
நிறுமுன் அரையாய்க்கதிரோன்முன் னேரோவைத்துநீயருந்து
நறுமென்முலையமேல்பூச நாதனருளால்கணந்தீரும் (௱௭௫)

கணத்துக்கு வேறுஎண்ணெ-வெண்பா.

விளக்கெண்ணெவில்வம் மிறவுரிசருள்ளி
அளக்கவகைக்கோர் உழக்காக்கி-விளக்கமுற்றுக்
கடுக்காயுங்கூட்டிக் காய்ச்சிசிறுவோர்க்கு
கொடுக்ககணம் போமென்றுகூறு, (௱௭௬)

கணத்துக்கு வேறுஎண்ணெ அறுசீராசிரியவிருத்தம்.

பொன்னுங்காணிவேறுடனே புளியம்சர்க்குவேப்பீர்க்கு
பின்னைஒவ்வொருபிடியதனில் விதமாய்க்கோழிஅவரையின்வேர்
சொன்னேதையலமேஅரையாக துள்ளநறுக்கி எண்ணெயிட்டு
உண்ணச்சூரியபுடம்வைத்து ஒடுங்கணமும்வாராதே, (௱௭௭)

கணத்துக்கு வேறுஎண்ணெ-கலிவிருத்தம்,

கடுகருஞ்சீரகம் கடுகுரோகணி
விடுவனமல்லிகை மீறும்இண்டிலை
இடுமுலைப்பாலினில் சருள்ளிஉசிலையும்
கொடுவிளக்கெண்ணெயில் கூறுகணக்களே. (௱௭௮)

கணத்துக்குவேறு நெய்,

அறுசீராசிரியவிருத்தம்.

கோட்டம்நல்லெண்ணெய் நெய்யும் குறித்தசண்பகப்பூகந்தம்
நீட்டியஅவுரிதுய்யநிலக்குமிழ்கடுகுரோகணி
நாட்டிலாமிச்சை மிக்க நலந்தருகிராம்புபாகம்
ஈட்டியேசாறுகொண்டு எரித்துண்ணகணம்போமின்னே (௱௭௯)
கந்தம்-வெண்காயம்.

கணத்துக்குவேறுமருந்து,

கிழ்க்காய்நெல்லிவேர்பட்டைக் கேள்கருவேப்பிலைசீரகமும்
வாழ்க்காய்ப்பச்சைநெல்லுமிதான் வகைக்கு விருகன்ஒன்றாக
மூழ்க்காய்க் குஜப்பாலிற்போட்டு முழுதும்இரவில் ஊறியபின்
காழ்க்காய்க்-காலமே-அரைத்துக்-கடுகப்பிழிந்து-மூக்காலே. (௱௮௦)
குஜப்பால்-முலைப்பால்

இதுவுமது.

காலைமூன்றுமேகொடுத்து கதிக்கசாயங்காலத்தில்
ஆலமிளகுபற்பமதாய் ஆக்கிச்சீரகமுஞ்சற்றே
சாலைப்பொரியவேவிட்டுத் தண்ணீர் ஊற்றிகாய்ச்சிக்கொடு
வேலைப்பழித்தவிழியாளே மிகுந்தகணமும்போமென்றே, (கூஅக)

கணச்சூடுதணிய எண்ணெய்,

சிற்றாமணக்கின்எண்ணெய்ப்படி திறமாய்என்றுவல்லாரை
சற்றுச்சாறுபடி அரையும் நானேவெந்தயம் பலம்இரண்டு
அற்றுபசும்பால்விட்டரைத்து அந்தயெண்ணையிற்கலந்து
வற்றஎரித்துசர்க்கரையிட்டு வார்க்ககணச்சூடுப்போமே. (கூஅஉ)

கணம் இருமல் வாநாற்றத்திற்கு கியாழம்,

மணித்தக்காளிஒருபிடியும் மானேவெந்தயம்பலம்நாலு
துணிந்திருவிந்தான்மூன்று துட்டெடையெல்லாம்பொன்னிறமாய்
குணித்துவறுத்துஇரண்டுபடி தண்ணீர்விட்டெட்டொன்றாய்காச்சி
கணித்துமூன்றுநோங்கொள் கணவாய்நாற்றம்இருமல்போம்(கூஅங)

இவ்வனம்சொல்லிய மாந்த முதிர்ந்து கணமாகி இரண்டுந்
தொந்தித்து மாந்தகணமாகிவருதல் கணமாந்தமென்றுகூறும்,

மாந்தகணத்துக்கு பச்சிலைச்சாறு.

எண்சீராசிரியவிருத்தம்.

நொச்சிலைத்துளசியிலை மொசுமொசுக்கை நோக்கியே மூன்றுமொரு நாமனுங்கொண்டு, சச்சமுடன் பிட்டவியலாகச்செய்து சாறெடுத்தொருநாங்குபாலகர்க்கு, இச்சையுடன்தான்கொடுக்க மாந்தமேதுஎழிலானமாந்தகணமோடிப்போகும், கச்சணிந்த பொற்சயில நகிலத்தாளே கடல்சூழந்தமண்டலத்திற் கருதிப்பாரே. (கூஅச)

மாந்தகணத்திற்கு வேறுகியாழம்-வெண்பா,

மாந்தகணம்போம் வல்லப்பொருமல்போம்
சேர்ந்திருமல்போகுஞ் சேஷ்மம்போம்—*காந்தி
துளசியும்திப்பிலியும் சொல்லும்மாபுல்லுரீஇ
களசிளரித்தருந்தக் கால். (கூஅரு)

* காந்தி-விட்ணுக்காந்தை

மந்தத்துக்குவேறு மருந்து கட்டளைக்கலித்துறை.

நன்னாறியும்சிறுகீரை * வனமல்லிநாவல்இண்டுப்
பொன்னருஞ்சங்கம்வேர்பாவட்டை * சீவிப்பொருந்து செஞ்சி

எந்நாளுங்காய்கின்ற வட்டைக்கிழுப்பை இவைகளெல்லாம்
மின்னார்மின்னிக்கிய மாந்தகணம்விரண்டோடிடுமே. (௲௮௬)

* வனமல்லி காட்டுமல்லிகை * மேல்-அவுரி

பொருமல் மாந்தகணத்துக்குவேறுமருந்து,

இடுமேதுளசிச்செம்முள்ளிப் பூலைப்பை இலையுடனே
வெடுமேநத்சகமுங் கஞ்சாங்கோரை நைதவேளையுடன்
கொடுமேகருக்கிப்புகட்டிடச் சாற்றைக்குழவிகட்கு
விடுமேபொருமல் மாந்தகணங்கள்விட்டோடிடுமே. (௲௮௭)

மாந்தகணம் பொருமலுக்கு லேகியம்,

விட்டிடுஞ்சாணைவேர்ப்பட்டைத்தட்டி விரைவுடனே
இட்டிடுக்கோபுறஞ்சமன்கட்டிக் கொடிபொடியாய்
மட்டிடுத்தேனில் இலேகியமாக்கிமின்னாக்கிட
பொட்டெனமாந்தகணத்தின் பொருமலும்போய்விடுமே, (௲௮௮)

மாந்தகணத்துக்கு வேறு மருந்து-எண்சீராசிரியவிருத்தம்,

புங்குவேலிக்கிளி மாவேம்பேபொடாக்கப் பொடுதலைவேலிக் கரு
வேப்பிலை நாரத்தைசங்கவுரிபொன்னைவைப்பிடி ஒவ்வொன்று தானு
ம் இலையிரக்கிடுத்தாக்கட்டிவிட்டு, சுக்குமேனியுமிந்தோமமுடிந்து
தா போட்டுத்தண்ணீரும் நாழிவார்த்து, அங்கெரித்தவற்றமுடிந்த
ம்மருந்தை அரைத்துக்கொடு மாந்தகணம் அடங்கிப்போமே, (௲௮௯)

மாந்தகணத்துக்கு வேறுநல்லெண்ணெ

கலிவிருத்தம்.

போகவேயின்னம் புகலுவோங்கேளு
ஆகமருளின் கிழங்குடன்உள்ளி
தாகவேஎனுமிச்சைச் சாறுவாங்கி
ஏகவேயெண்ணெ எரித்துநீஉண்ணே. (௲௯௰)

இதுவுமது,

உண்ணகணங்கள் ஓடுமேமெய்யா
மண்ணில்மாந்த கணநோய்ச்சேஷ்மம்
கண்ணிற்காணு கதறிடும்பாரு
எண்ணுமேஇந்த எண்ணெயைச்செய்திடே: (௲௯௧)

மாந்தகணத்துக்கு வேறுஎண்ணெ

அறுசீராசிரியவிருத்தம்,

புள்ளடிப்பொடுதலைச்சார் புரிப்பதோர்தகரைச்சாறு
வெள்ளமிளகுத்தக்காளி மிகுகருநொச்சில் *பாசி

வெள்ளைப்பூண்டும்வசம்பு வெண்காயச்சாறுதானும்
தெள்ளிதாய்ச்சமன்கொண்டெண்ணெய்ச்சேர்த்தெரியுங்காலே (௩கூஉ
* பாசி-பழம்பாசி

இதுவுமதற்கு வியாழம்.

காலமேஇந்தஎண்ணெக் கடியசாயங்காலந்தன்னில்
சீலமாகுக்கோடோமம் சேர்ந்தபொன்முசுட்டைவேளை
ஏலமாம்நாட்டுமூலம் இதமாய்த்திப்பிலியுங்கூட்டி
கோலநீர்க்காய்ச்சிக்கொள்ளக் கொடுமாந்தணமும்போமே, (௩கூ௩)

மாந்தகணத்துக்கு வேறு எண்ணெ

எண்சீராசிரியவிருத்தம்.

வல்லாப்பிரமி செருப்படைநீர் முள்ளிமணக்கு மணித்தக்காளி மொசுமொசுக்கை, சொல்லெருமைத்தக்காளி துளசிதானும் அடகோழிஅவரைநெய்ச்சிட்டியெல்லாம், நல்லநேர்வளைவகைக்குப்பிடியொன்றாக நவையில்லா இலைகளெல்லாங்கொண்டுவந்து, கல்லனுவைத்துப்பிழிந்து படிகால்சாறு கனமானஎண்ணெபடிஅரையதாமே, (௩கூ௪)

இதுவுமது.

அரையதாம் துமட்டிக்காய் துவைத்தச்சாறும் அறியவெண்காயச்சாறும் ஒருசொங்கை, நிரையதாம் விட்டெல்லாங்கலந்துக் காய்ச்சி நேர்கடுகுபதமாகும் போதிலேகேள், கரையதாம் கார்போக அரிசிபூண்டு கருஞ்சீரம் வசம்புவகைவகைக்குதானே, விரையதாம்விருகவொன்றாநறுக்கிப்போட்டு மெழுகுபதமானவுடன் இறக்கிடாயே (௩கூ௫)

இதுவுமது-கலிவிருத்தம்.

இறக்கியேவடி கட்டிஇருமுற
சிறக்கவேகொடு பிள்ளைக்குஅன்புடன்
வறக்கிடும்நல்ல மாந்தகணமுடன்
திறக்கும்அட்சரம் நீருபிதுண்மையே. (௩கூ௬)

மாந்தகணத்துக்கு வேறு நெய்

அறுசீராசிரியவிருத்தம்.

* வேலிப்பரித்திசமூலமுடன் வெள்ளைச்சாணைக்குட்டிவிளா
மூலிவேளைவேர்வசம்பு முதியவெள்ளைவெண்காயம்
கோலிநறுக்கிச்சார் * மேதி கொடுத்தவெண்ணெதனிலெரித்து
சீலமுலைப்பால்தனில்பொடித்த சேர்ந்தமாந்தகணம்போமே, (௩கூஎ)
* வேலிப்பரித்தி-உத்தாமணி * மேதி-எருமை,

மாந்தகணத்திற்கு வேறுஎண்ணை

எண்சீராசிரியவிருத்தம்.

விளக்கெண்ணெ ஒருநாழி ஆறுஇலைச்சார் விருப்பமுடன் ஒருநாழிதானேஆகும், இளக்கமாய்ப்பிருள்ளிச்சாறுநாழி எழில்வில்வத்தின்கொழுந்துப்பிடி இரண்டு, துளக்கருஞ்சீரகம் இரண்டு விருகன்தானும் துவர்க்கடுக்காய் நாலதுவும் பொடியேசெய்து, விளக்கமாம்வெண்காரம்விருகன்ரண்டு விபரமுடனேபொரித்து அதனிற்கூட்டே (௯௬அ)

இதுவுமது

கூட்டியேகொதிக்கையிலே சரக்கைப்போட்டுக் குணமாக பதம்பார்த்து தான்யிறக்கி, ஆட்டியேவடித்துவைத்துக் கொண்டுநீயும் அழகாகசங்கெடைபாய்ப் புகட்டிவந்தால், வாட்டியே எழுந்தபொல்லா வியாதியான மாந்தகணஞ்சொல்லாமல் வோடிப்போகும், காட்டியே கைப்புபுளி கவிச்சிறச்சிக் கருதாமல் பத்தியத்தில் தாயைவையே. ()

விஷமாந்தகண விக்கலுக்கு ஔஷதம்,

* முருவிலிநன்னரியொடு வெண்காயந்தான் முதிர்வசம்பு இந்துப்புக்கடுக்காய்முள்ளி மருவியநாரத்தை எலிமிச்சை வேலை வாகான *மலைதாங்கிக்கிழ்க்காய்நெல்லி, வருவியதோர்பூசனியுமேபாச்சோற்றி வளர் * குறட்டை *மால்காந்தை வகைஒன்றாக்கி, பெருகுநல்ல நீர்விட்டுக்காய்ச்சிக்கொள்ளப் பிலத்தவிஷமாந்தகணம் விக்கல்போமே, ()

* முருவிலி-வவ்வாலொட்டி * மலைதாங்கி-பங்கம்பாலை * குறட்டை-காக்கணன் * மால்காந்தை விட்ணுக்காந்தை, (௯ா)

ஊதுமாந்தகணத்தின்குணம் தன்வந்திரி

அறுசீராசிரியவிருத்தம்,

தானேஊதுமாந்தகணம் தனதாய்உரைப்பேன்மடமயிலே
வானேகாலுங்கண்உடம்புவளமாய்வீங்கிநரம்புண்ணாய்
ஆனேகேளாய்சுரம்உண்டாய் அன்னந்தண்ணீர்க்கொள்ளாது
கானேகாலுங்கைசோர்ந்து கனத்தசுவாசஅதிகமென்றே (௯ாக)

இதுவுமது,

அதிகமாய்ஊதுமாந்த கணமதுபனிரண்டாண்டு
அதிகமாம்அந்நாள்மட்டும் ஆம்இதுநோயின்காலம்
அதிகமாய்மருந்துகேளாய் அன்புடன்உரைப்பேன்தானே
அதிகமாம்தேவிவாலை அருளினால்உரைப்பேன்கேளே (௯ாஉ)

இதுவுமது.

ஊதுமாங்கணத்துக்கு எண்ணெய்.

உரைப்பேன்எந்தன்குருவருளால் ஓ ஓமுள்ளிநீர்முள்ளி
திரைப்பேன்இரண்டுவேர்க்காயம் தேங்காய்நெற்றுப்பாலுடனே
கரைப்பேன்கையான்கரந்தையுடன் கண்டங்கத்திரிவசம்பேலம்
திரைப்பேன்வெட்பாலரிசியொடு திகழுமாதுளம்பழச்சாறே, (௬௱௧.)

இதுவுமது,

பழமேவட்டத்திருப்பியுடன் பற்பாடாமும்முந்தமுடன்
தழமேஒரிதழ்தாமரையும் நன்தாமரையுஞ்செங்கழுநீர்
மழமேநாத்தாமரை வல்லரையின்தன்சாறுடனே
வழுமேவிளாவின்பிசின்வாகை மருக்காரைப்பிசினுஞ்சேரே, (௬௱௨)

இதுவுமது,

சேரேஇலவம்பிசின்சேரு செங்கத்தாரிமுருங்கன்சாற்
மாரேமாசிக்காயுடனே மகிமைகடுக்காய்அதிவிடையும்
சீரோவாவின்பிசினோடு சிவந்தசாதிபத்திரியும்
வாரேஎல்லாம்வகைக்குக்கால் வளமாய்ப்பொடித்துஒன்றாக்கே. ()

இதுவுமது,

பொடித்திடுமருந்திதனோடே புகழ்விளக்கெண்ணெய்வார்த்து
அடுத்ததோர்அடுப்பில்ஏற்றி அழகதாய்தீயைமூட்டி
வடிதந்துகடுகுந்திரண்டால் வளமாகஇறக்கிக்கொண்டு
தடுத்ததோர்தேவிமாதை நயவுடன்பூசிப்போற்றே, (௬௱௪)

இதுவுமது,

போற்றியஎண்ணெய்தன்னைப் புகழ்ந்துதட்டெடைதான்ஈய
ஆற்றியமூன்றுவேளை அழகதாய்க்கொள்ளச்சொல்லு
மாற்றியபுளிப்புநன்றுவகைபுறப்புகையுமாகா
எற்றியகவிச்சுஎன்று இவையெலாம்ஆகாதென்னே, (௬௱௭)

இவ்வேழுமொருதொடர்,

கணமாந்தகுணம் மாந்தகணமெனினுமொக்கும்,

ஜெடலமாம்கருவிலான சிசுவதற்கின்னங்கேளு
விடலமாங்கணமாந்தந்தான் மிகுங்குறிகுணத்தைப்பாரு
அடலமதாகப்பெண்கள் அடவதாய்தலைக்குஎண்ணெய்
தடமதாய்த்தேய்த்துச்சுத்த சலத்தினில்முழுகினாலே, (௬௱௮)

இதுவுமது,

முழுகியேஅன்னம்உண்டு முழுக்கெனஎழுந்தபோது
அழகியமயக்கசோப தாபமுமிகுதியாலே

தழுவியேபடுக்கமாது சடுதியில்உறக்கங்காணில்
விழுவியே * உதானவாய்வால் விசகலாந்தாயினுமே, (சாஙஅ)
* உதானன் * நாபியில் நிற்கும்வாயு

நாகுமேஅவள்மோகத்தால் நாயகனோடேசேர்ந்து
நோகவேதேகமெல்லாம் நுசிதமல்லாடும்போது
தாகபோகத்தால்அந்த * சமானனும்வாய்வெழும்பி
ஏகிடுங் * கமலம்புக்க இறுத்திடுங்குளுமைவந்தே, (சாஙூ)
* சமானன் -கந்தரக்குழியிற்சந்திடைநிற்கும் வாயு * கமலம் பிரபைசொலிக்கும் ஸ்தானம்,

இதுவுமது,

குளுமையாய்ஏழுநாளும் கூறியதலையிடிக்கும்
எளுமையாம்பெண்ணுளுக்கு எழும்பிடுங்கபாலஞ்லை
வளுமையாம்பின்னும்ஏழு வளம்பெறநாள்சென்றக்கால்
வெளுமையாய்தேகம்ஏகும் வெளுத்துடன்வயிறுநொந்தே (சாகக)

இதுவுமது,

நொந்ததால்சூதகத்தில் நோயிதுவென்றுசொல்வார்
பந்துபோல்நாபிதன்னில் பாசிபோல்இருக்குமென்பார்
வெந்துதான்பித்தச்சூட்டால் மிகுத்தநோர்நோயிதென்பார்
தந்திரவாய்வினாலே சன்னியும்இதுவென்பாரோ. (சாகஉ)

இதுவுமது,

இதுவென கணமாந்தந்தான்ஏறியேபெண்ணுளுக்கு
வதுவெனக்கருவில்பற்றி மைந்தனும்பிறந்துநாளுல்
பதுவெனமாதுக்கேதான் பாலனுமிகுதியாகும்
அதுபத்துநாளுந்தானும் அமிர்தமேபெருகுந்தானே (சாகங)

இதுவுமது.

பெருகிடும்பத்துநாளும் பின்புநாள்மேலேசென்றால்
கருகிடும்மூலச்சூட்டால் கல்லுபோல்கட்டும்பாலும்
மருகிடும்அதுநாள்கொண்டு மஞ்சனும்இளைக்குந்தேகம்
தருகிடும்வாந்திவாய்நீர் தலைபதுசுழற்றலாமே, (சாகச)

இதுவுமது,

தலையதுசுழற்றல்காணும் தான்வரும்நாளுகேளு
கொலையதுதந்தைதாயார் கொடுமையின்வினையினாலே
நிலையதாய்க்கர்மநோய்தான்நிலைத்திடுஞ்சிசுவுக்கேதான்
அலையுமபிறந்தபிள்ளை அஃதிரண்டாண்டுபின்பே, (சாகரு)

இதுவுமது,

பின்புமேவருந்துங்கோய்தான் பிறந்தவோர்வினையைக்கேளு
தென்புடன்றேங்காய்வாழை திக்கிப்புவடையபாயசம்
அன்பலைக்கனையம்பிருநி அரிசியின்அடையுந்தானும்
நன்பதுருமுத்தைதக்கேதான் நாட்டிடில்கணந்தாறுமே. (௲௧௬)

இதுவுமது,

கணம்வருமாந்தந்தாலே * காதலன்குணத்தைக்கேளு
துணம்எட்டுநாள்நல்லில் துவண்டிடும்சுத்திக்காணும்
பணவரிநிறைசக்கரவி பாவிபோல்பேதியாகும்
விணவிழிசுழன்றசோர்ந்து விடவிடென்றலரும்நாவே (௲௧௭)

* காதலன் பிள்ளை

இதுவுமது.

நாவதில்சலமிராது நடைமுறன்மறதிகாணும்
காவதான்றுபாலைன் கருதிப்பிறகில்லாத்நாகம்
கூவதுஎன்றாலும் நாளது குவியுமாகும்
தாவதுகணமாந்தந்தான் தாயினிலறுகுமாறே, (௲௧௮)

இதுவுமது,

அணுகிடுமாந்தத்திற்கு அறைகிறேன்புடதியாய்க்கேள்
வணுகிடும்இவணைப்போக்க வைத்தியர்உலகில் இல்லை
நணுகிடுமைந்தரைநா நாடிமுன்காதுபார்த்து
கணுகிடுங்கைவல்லயந்தான் தாவிநந்தாதியாமே. (௪௧௯)

இதுவுமது,

தாதிமையப்பார்த்துமாந்த ரோய்தனைஅறவைத்தேரி
சேதிமைய * சாத்தியச் செயவினைஅறிந்துமேவி
நீதுஅகணமாந்தந்தான் தீரவேமருந்துகேளு
மேதினியோர்களுக்கு விரும்புதேன்எண்ணைதானே (௲௨௰)

* சாத்தியம்-அசாத்தியம் அது உண்மையும் சந்தேகமும்

கணமாந்தத்திற்கு எண்ணை.

விரும்பக்கேள்சித்திரமூலி விளங்கவேகுன்றிசங்கு
திரும்பவேமுல்லைமுன்னை சிற்றாமல்லிப்பேராமல்லி
அரும்பவேகாட்டகத்தி ஆவாரைப்பொன்ஆவாரை
குரும்பனைமணித்தக்காளிக் கொள்ளுக்காய்வேளைவேரோ (௲௨௧)

* காட்டகத்தி வீழி,

இதுவுமது,

வேரினில்வகைஒன்றுக்கு விரும்பிடும்பலமுக்காலாய்ச்
சேருநீஒன்றாய்வாங்கி செயம்பெறவரியில்மூன்று

ஆருமேஅறியதானும் அடவுடன்சான்உலர்த்தி
பாரினில்உரலில்இட்டுப் பாய்ச்சிடுந்தோண்டிக்கொள்ளே, (௪௨௨)

இதுவுமது,

தோண்டியேதுணிநீரில் துளிநீர்ச்சேருதாக்கி
ஆண்டியேமருந்துபின்னும் அருளுவோம்புனல்முருங்கை
காண்டியேகத்தைச்சூரி காய்வேளைகுறிஞ்சான்இண்டு
வேண்டியேசரியயற்றம் நன்னாரிப்பிரமியாமே, (௪௨௩)

இதுவுமது,

பிரமியும்தும்பைபொன்னாங் கண்ணியுமொசுமொசுக்கை
திறமையாய்வகைஒன்றுக்கு சிறப்புடன்பலம்ஒன்றாக
நிறமையாம்இந்தினைச்சாறாய்ப் பிழிந்துடன்முன்புநீரில்
ஒருமையாய்விட்டுத்தானும் உசிதமாஞ்சாக்கைக்கேள் (௪௨௪)

இதுவுமது,

சாக்கில்வால்மிளகுநல்ல சடாமாஞ்சில்அக்ராகாரம்
திறக்கவேச்சண்பகப்பூ செவ்வியம்நாகரம்கோஷ்டம்
புக்கவேகடுகுரோகிணி புகலக்கேள்க்கு நான்றி
உறக்கவேகடுக்காய்சாதிக் காயுடன்லவங்கப்பூவே (௪௨௫)

இதுவுமது,

பூவதுகடுக்காய்ப்பூவும் புகழதாய்வகைக்குவீதம்
தாவதுகழஞ்சிரண்டு தனிதனியாகவாங்கி
வாவதுஇளம்வறுப்பாய் வறுத்துடன் உரலில்தாக்கி
மாவதுபோலேசாடி தோண்டிமுன்நீரில்தாக்கே, (௪௨௬)

இதுவுமது,

தாக்கியேபின்புகேளு தாரமும்கெந்திவீரம்
தோக்கியேவாளம்நாபி வெள்ளைஅப்பிரகந்தானும்
வாங்கியேபுழுகுசலாசத் துடனேகஸ்தூரிவாங்கி
பாக்கியமாகவீதம் வகைவகைப்பலங்காலாமே. (௪௨௭)

இதுவுமது,

பலமதாய் இடித்துத்தூளாய்ப் பாண்டத்தின்முன்புநீரில்
சலமதிற்கொட்டிப்பின்பு சாற்றுறேன்இன்னங்கேளு
நிலம்போமணக்கின்னெண்ணை பிரியமாய்ப்படிரண்டிட்டு
வலமதாய்அடுப்பிலேற்றி வன்னியைமூட்டிடாயே. (௪௨௮)

இதுவுமது,

வன்னியைமூட்டிரண்டு சாமமும்எரிக்கும்போது
பன்னியநீர்எல்லாந்தான் பரிவுடன்சுண்டிப்போகும்
முன்னியப்படிரண்டாகும் மோசமேவாது உண்மை
கன்னியாம்வாலைதன்னைக் கருதிடகண்டும்பாரே, (௪௨௯)

இதுவுமது,

சண்டிடும்பாகங்கண்டு குசுதமாய்இறக்கிஆற்றி
கண்டிடும்வடியேகட்டிக் கருதிடுங்கலசந்தனனில்
பொண்டிடும்வாலைதேவிப் பூசையில்வைத்துப்போற்றி
தெண்டினையோர்களுக்குத் தீவினைபகற்றுமென்றே. (சகய)

இதுவுமது,

அகற்றவேகணைமாந்தந்தான் அலறியேபோவதாக
தகற்றவேகாலைதன்னில் தாய்தனக்காறுகுன்றி
நகத்தவேகொடுத்தானண்ணெய் நாடியேபின்புவழு
தொகுத்தவேகடிகைசென்று பிறகுபத்தியந்தான்சொல்லே, (சகக)

இதுவுமது.

பத்தியம்லவங்கப்பூவும் பண்புடன்மிளகுங்கூட்டி
புத்தியாய்பழங்கொருக்காய் புளியதுகூடச்சேர்த்து
மத்தியேபடிநீர்க்கூட்டி வன்னியிற்கொதிக்கக்காய்ச்சி
சித்தியாய் ❋ லவணந்தன்னைச் சிவக்கவும்வறுத்துக்கூட்டே, (சகஉ)

இதுவுமது,

கூட்டியேசாறுசெய்துக் கொண்டிடஅன்னம்வெந்நீர்
காட்டியேகர்ப்பச்சூடுக் கழன்றிடும்பேதியாகும்
நாட்டினில்மங்கையர்க்கு உண்டபின்இளைப்பில்லாமல்
வேட்டியாம்பனறுங்காக விழுந்திடுங்கணச்சூடாமே, (சகங)

இதுவுமது,

சூடதாகழன்றமற்று நாளையிற்காலைநேசம்
நீடதாயிருந்துபாலன் நேர்மையையுரைக்கக்கேளு
வீட்டில்உதித்தமாந்த கணமதுவிரண்டுபோக
சாடிதானண்ணெய்தன்னில் சாற்றிடுங்கழஞ்சிரண்டே (சகச)

இதுவுமது.

சாற்றிடஎண்ணெய்தந்தா சார்ஒருநாழிச்சென்றால்
காத்திடபேதிரண்டு தாமெனக்கழன்றாலும்
மாற்றிடுஅதன்பின்புக்கேள் ❋மாத்திரைகடிகைசென்றால்
கேட்டிடலாகும்அன்னம் கொடுத்திடுஅமுர்தப்பாலே. (சகரு)

❋ மாத்திரை-ஒருநொடி

இதுவுமது.

கொடுத்திடஇந்தவிதம் கூறின❋நவநாள்எண்ணெய்
விடுத்திடும்அதனைத்தள்ளி மிகுந்துடன்நவநாட்சென்றால்

அடுத்துடன் ஓமம்தேய்த்து அடவுடன்தலைக்குவாரு
தொடுத்துடன்சிறுபருப்பும் சோறுமேகூட்டிடாயே (சநகசு)
✻ நவநாள்-ஒன்பதுநாள்

இதுவுமது.

கூட்டிடுஇந்தவிதம் கோனைநமாதினுக்கேபத்தியம்
நாட்டினப்போதேஎண்ணெய் நளினமாய்வதுக்குங்காயம்
ஊட்டிடும்சடலம்விட்டு ஓடிடுங்கணமாந்தந்தான்
தேட்டிடஇளையும்பாலன் தன்தேகமும்சுபஸ்தம்நன்றே (சநகஎ)

கணமாந்தத்திற்கு வேறுஎண்ணெய்

ஆசிரியவிருத்தம்,

திறமான வெள்ளாட்டுப்பாலுமே இருநாழி திகழ் விளக்கெண்ணெய்நாழி, திருகுகளிபலம்ஒன்றிண்டங் கொழுந்தொரு பிடிச்செண்பகப்பூமாழுக, உறமானசாதிக்காய் லவங்கேலம வெள்ளுள்ளி ✻ பத்திரிப்பூண்டுடன்ஓதும் ✻ இருசீரகம்வசம்பிலாமிச்சையும் உறுவெட்டி நன்றுறியும், சிறுநாகமுத்தமொடு பூலாக்கிழங்குடன் திவ்யமிகுகோரோசினை, சேர்க்கடுக்காயுரோகணிகோஷ்டமும் பச்சைத் திரு ✻ நாகமுஞ்சமனதாய், சாமாகவே அரைக்காசெடைஅரைத்திடுதணலிலெரிபதமதாக, தையலேபால்எண்ணெய் உண்டிடக்கணமாந்தம் தூணிவிட்டோடிவிடுமே. (சநகஅ)

✻ திருகு களி-திருகுகள்ளி-பத்திரி-சாபத்திரி✻இருசீரகம் நற்சீரகம்கருஞ்சீரகம்✻வெட்டி-வெட்டிவேர் ✻நாகம் நாகேசரம்-அன்றியுமிவ்வெண்ணெய் கொடுக்கும்போது முலைப்பால்கூட்டிக்கொடுக்கவும்.

கணமாந்தத்திற்குவேறுமருந்து வெண்பா.

வால்மிளகுப்பூண்டோமம் வசம்புகருஞ்சீரகமும்
சாலக்கிராம்பு சண்பகப்பூ—மால்சரியாய்
தூக்கிப்பொடுதலைச்சாற் றுவளஅரைத்துக்கொடுக்க
போக்குங்கணமாந்தம் போம். (சநகக)

கணமாந்தம்வயிற்றிளைவுபொருமலுக்கு

பாலசஞ்சீவிமாத்திரை,

ஆசிரியவிருத்தம்.

சீர்கொண்டதுத்தம் வெண்காரமொடு ✻ ரோசினைத்திகழ்கின்ற ✻நற்கொழுஞ்சி, சிக்குமலம்விழ் கடுகுரோகணி ✻ கழஞ்சுகரி சேரவேசே

ர்த்துநன்றாய், வேர்கொண்டகந்தியிலை * நீர்விட்டரைத்துமே மெள்ளஒருசாமம்மட்டும், விசைகொண்டமுந்தி அரைசிறுபயறுபோலவே மேன்மைபெறஉண்டைசெய்து கார்கொண்டகுழல்மகுபெண்ணணங் கேயமுற் காய்ந்தநீர்அநுபானமாம். கற்கம்அறிநல்லதொருபத்திரிப்புட்டிலுங் கன்னியிளமைதாசித்ர வார்கொண்ட மென்முலைப்பாவிலும் இடுவதுவல்பிணிச் சகலகாமும், வயிறுளைவுபொருமல் கணமாந்த முட்வாராதுவாலசஞ்சீவியென்றே, (௪௪௰)

* சோசினை-கோசோசினை-கொழுஞ்சி-கொள்ளுக்காய்வேளை. கழுஞ்சுநிரி- மூன்றுகழுஞ்சு*நீர்-அகத்தியிலைச்சாறு-புட்டிலி -புட்டிவெல்லம்,

கணமாந்தத்திற்கு வேறு எண்ணெய்தேறையர்

கலிவிருத்தம்.

மாற்றிடுபொன்றுங்காணி வல்லாரையோ - டேற்றிடும்புளியாரைக் கிழ்க்காய்நெல்லி-சேர்த்திடுத்தூளசிச்சிறுபுள்ளடிப்-போற்றிடும் வறப்பூலாதகரையே. (௪௪௧)

இதுவுமது,

தகரைஓரிதழ்த்தாமதாப்புங்கிலை அரையத்துதுவளையம்மான் பச்சிலைதுவரைப்பிர்க்கிலைச் சூரைவெண்ணெச்சிலை - அவரைச்செங்நாயுருவிக்காய்வேளையே. (௪௪௨)

இதுவுமது.

வேளை*முத்திருந்கன் சேசிஆடுணைப்-பாளை* வேலிப்பரித்திமிளகுதக்காளி ஆடாதோடைக் கருநொச்சில்நாய்- வேளைச்சின்னிவேம்பு*வட்டப்புல்லிதே, (௪௪௩)

* முந்திருந்கண்செவி நிலக்கடம்பு*வேலிப்பரித்தி - உத்தாமணி-உத்தாமணி*வட்டப்புல்காவட்டப்புல் (௪௪௪)

இதுவுமது.

புல்விதுகணப்பூண்டு நுணைத்துளிர் சொல்லிது * பரிவாலிச்சிறுகிளைவெல்லிது * மொசுக்கைநவேர் முருங்கிலைச்சொல்லிது பொன்முசுட்டையும்பாங்கிடே.

* பரிவாலிகுதிரைவாலி மொசுக்கை மொசுமொசுக்கை

இதுவுமது,

பாங்கிடத்திநரிப்பயட்டங்கொடி நீங்கிடத்திலக்குமிழாவரை வேங்கிடத்தி சாவிட்ணுக்காந்தியும்- தாங்கிடத்திசங்கங்குப்பிதாக்கிடே, ')

இதுவுமது,

தாக்கிடாச்சங்குதாளிராவல்துளிர் - மேக்கிடாய்கண்டங்கத்திரிவில்வமும் - தேக்கிடாய்சீந்தில்குட்டிவிலாச்சமன் - ஒக்கிடாய்இடித்தோர்படிச்சாறுமே. (௬௪௫)

இதுவுமது,

சாறுஞ்சீரகங்கிராம்புவசம்பொடு-சேருஉள்ளியும் திப்பிலிபற்படம்-ஊறுமேகடுரோகணிமஞ்சளும்-பாரும்*பூவந்திப்பழமுமஈருள்ளியே,(
* பூவந்திப்பழம்-மணிப்புங்குபழம்

இதுவுமது,

உள்ளிடாமை ஒடுங்கருஞ்சீரகம் - வள்ளிடாழிநுரைவகைக்கேபலம் தெள்ளிடாட்டிச் சிற்றுமணக்கெண்ணெய்சேர்த் - துள்ளிடரிய்ப்படி. தோற்றிரண்டேற்றிடே, (௬௪௮)

இதுவுமது

எற்றிட்டேஎரித்தேஇறுத்தேவுடன் - தோற்றிட்டேழ்தினத்துட்டுடைஉள்ளுக்கு - வாற்றிட்டேகணமாந்தம்ஓர்வழையும் சாற்றிட்டேபுளிஉப்பில்லைக்கண்டிடே. (௬௪௯)

இவ்வெண்பதுமொருதாடர்

நீர்க் கணமாந்த குணம்,

அறுசீராசிரியவிருத்தம்.

இருமும் மூக்கில் நீர்வடியும் இடையில்இடையில் சுரங்காயும் * பொருமிவயிறு இரைச்சலுண்டாம் போலப்பலவித மாய்க்கழியும் சொருகுங்கண்ணும் உடம்புமுகம்சோர்ந்துதலையும் புரட்டலுண்டாம் மருவிமயக்கம் உண்டாகும்வருகுநீர்க்கணமாந்தமுமே (௬௫௦)

நீர்க்கணமாந்தம் கணமாந்தமெட்டு குடற்படுவன் நீர்பாடு கர்ப்பப்பாடுநாவரட்சிசுரம் சூலையெறிவு வெப்புதோஷத்திற்கு,

அமுர்தாதிக்குளிகை எண்சீராசிரியவிருத்தம்,

அருளினர்அமுர்தமெனுங் குளிகைதானும் அதிமதுரம் சண்பகப்பூவலமோடு, திருவுகோரோசினையுஞ் சாதிரோதி சிறந்தவெட்டிவேர்க்கோஷ்டம் மாசிப்பச்சை, தருவெலவெவிலாமிச்சம் வேறுங்கூட்டிச் சரியாகவூதென்டைச்சாறுவிட்டுப் பருவமதாய்ஒருசாமம் அரைத்துக்குன்றிப் பருமனுக்குமூலம் பரமிப் பருகிடேயே, (௬௫௧)

இதுவுமது.

பருகிடல்ஓர் உண்டைதனை முலைப்பால்தன்னில் பகைத்துவருங் கணமாந்தம் எட்டுந்தீரும், திருகுகுடல்படுவன்னீர்ப் பாடுந்தீரும் சோகர்ப்பப்பாண்டுசுரமட்டுந்தீரும், குருவெனவே இக்குளிகைசுரமுந்தீரும் குலையெரிவு வெப்புமுதல் தோஷந்தீரும், அருவெனவே முனிபுரைத் தார்பாரின்மீது அமுர்தாதிக்குளிகைதனை அறைந்திட்டாயே, (௪௩௨)

சியக்கத்தின் கணமாந்தம் போர்மாந்தத்திற்கு

கோடாசுழிவூறலம் இதைச்செறுக்கத்து கணமாந்தமென்பர்,

வசம்போமம் வெள்ளுள்ளிக்காயுந்தாலும் வகைவகைக்கு காற்பலமாயிருந்துக்கொண்டு, நிசம்பெறவே தூள்செய்து வைத்துமேலும் தினைவாகவேப்பெண்ணைபடி அரைக்குள், தசம்பெறவே தூள்போட்டு ஒருநாழிந்தான் தணவிலேகொதிக்கவைத்தாறுநாளும், கசம்பெறவே விட்டுத்தான் வைத்தபின்புகனத்ததிப்பியுடன் வேடுக்கட்டிகொள்ளே.

இதுவுமது.

கொள்ளவே குழந்தைகளின் நிதானம்பார்த்துக் கொடுத்துவர கெற்கத்துக் கணந்தானேது உள்ளவேமாந்தம்போர் மாந்தமேதுமுவிளையால்வந்த சர்வமாந்தந்தீரும், மெள்ளவேதாய்தன்னைப் பத்தியத்தில்வைத்து மிளகுநீர்ச்சாதமிட்டு உண்ணச்சொல்லு, வள்ளியமாம் பொதிகைமுனி அருளினாலே மஹாநோய்கட்பறந்துவிடும் வண்மைபாரே, (௪௩௪)

(செங்கமாந்தகணைத்தின்குணம் அதிவிஷமாந்தகுணம்- தன்வந்திரி.)

போரானசெங்கமாந்த கணைத்தைக்கேளு பெருமையாய்உந்தி அணைக்கீழமேலெழும்பி, வாருமாசுமேபுண்ணுப்பெந்து வலுமையாய்சுவாசமேல்இழுப்புமாகி, சீருணதேகந்சமலைக்காய்த்துசிவசிவாதழக்கபோகேசமுமம்சீசும், சீரானசுவாசமது திக்குமுக்காடி வெகுளியாய்மாமதைமிக்கு செங்கிகணம்பாரே (௪௩௫)

இதுவுமது,

செங்கிகணம்பின்னைகட்குசுரமிருக்கு செவிசிவாமாந்தசுரமிதுதானென்பார். செங்கிகணமாந்தமிது ஏழுநன்றாற்கால் சீதகற்றிப் பதின்மூன்றுப்பிராயமட்டும், செங்கிகணமாந்தமிதுஇருப்பிடந்தான் சிறுவனென்றபின்னைக்குச் சாத்தியதுப், செங்கிகணம்ஒழிவதற்கு அமுர்தாதின்னை அறைமதிலேவின்னுகிறேன் இதனைப்பாரே, (௪௩௬)

செங்கிமாந்தகணைத்துக்கு அமுர்தாதிகுளிகை,

இதனைப்பார் அதிமதுரம் கோஷ்டம்ஏலம் இனியகோரோசினையும்சாஸ்திரபேதி, இதனைப்பார் சண்பகப்பூமாசிக்காயும் இலவங்கப்பூவு

டனே வகைக்குக்கால்தான், இதனைப்பார் இவையெல்லாங்கல்வத்திட்டு எழில்வெட்டிவேர்மாசிப்பத்திரிவேரும் இதனைப்பார்க்கருந்துளசி விலாமிச்சோடு இன்பமதாய் நால்வகையுஞ்சார்பிழிந்தே. (சருஎ)

இதுவுமது,

பிழிந்துமேகல்வத்தில வார்த்தரைத்துப் பிலமாக இருசாமம் விடாமல்ஆட்டு. கழிந்துமேகுன்றிப்போல் உண்டைசெய்து கண்மணியேநிழல்உலர்த்திச் செப்பில்வைத்து, வழிந்துமேவாலைமனோன்மணியைப்போற்றி வகையானமாசிபத்திரிக் கியாழந்தன்னில், அழிந்துமேகுளிகையொன்றுக் கொடுத்துப்போடு அரஅரா முன்சொன்னமாந்தம்போமே. (சருஅ)

இதுவுமது.

மாந்தம்போம் லவங்கப்பூகியாழந்தன்னில் மகத்தான மாந்தசுரம் வாந்திதீரும், மாந்தம்போம் முலைப்பாலில் கொடுப்பீராகில்வனைந்து வருங் குடல்படுவன் நீர்ப்பாடுதீரும், மாந்தம்போம் கரப்பான் நாவரட்சித்தீரும் வயிற்றெரிவு அன்னவிடாய்ச்சுரமுந்தீரும் மாந்தம் போம்உப்பிசமும் இருமல்போகும் மகத்துவமாம் அமுர்தமெனுங் குளிகைபாரே. (சருகூ)

இவ்வைந்து மொருதொடர்,

நீர்க்கணத்தின்குணம் அறுசீராசிரியவிருத்தம்,

நீர்க்கணக்குணமேகேளு நீரின்மேல்மனதுவைக்கும்
வேர்க்குங்கண்தாழ்ந்துசற்று வேர்வையில்வெதுப்புதோன்றும்
நாக்குவாய்வரண்டுக்காணும் நல்லநீர்கழிச்சலுண்டாம்
பார்க்கிலோநீர்க்கணத்தின் பலபலகுணங்கள்தானே, (ச௬௰)

இதுவுமது.

தாகமும்கழிச்சல்உண்டாம் தலைபதுசுழற்றல்காணும்
வேகமாய்ச்சுரமுஞ்சற்று விட்டுவிட்டடனேகாயும்
வாகுசேர்கண்ணுந்தாழ்ந்து வாயுடன்நாவுலர்ந்து
சோகமும்வயிற்றில்நோவாய்ச் சோர்ந்துகைகால்தண்ணீரே (ச௬௰க)

இதுவுமது தன்வந்திரி

முகம்புறங்கால்புறங்கையு மோதிமினுமினுப்புண்டாகும்
தகைசேர்தாகமுண்டாகித் தண்ணீர்உழலைமிகக்குடிக்கும்
மிகவேமயக்கம்வெதுப்புண்டாய் வெடித்துநாவுந்தான்புண்ணாய்
மகமேர்ஒத்ததனத்தாளே வருநீர்கணத்தின்வகையாமே, (ச௬௰உ)

இஃதொருதொடர்

நீர்கணத்துக்குக் குடிநீர்- வெண்பா.

சாரணைக்காய்முக்குரட்டைக் தன்காய்பொடுதலைக்காய்
பூரணமாந்திரிகடுகு பூந்துளசிகாரணியும்,

தொங்கையபோ சீசகமுங் கூட்டிக்குடிநீராய்
உண்கவேதீர்க்கணந்தான் ஓடும், (சகூக.)

சுழிகணத்தின் குணம் அறுசீராசிரியவிருத்தம்,

சுழியெனுங்கணமேசொல்லில் சுழியவேசுவாசம்வாங்கும்
நவிருடன்சுரமுந்தோன்றும் * நயனம்பஞ்சடைந்துக்காணும்
தெளிவுடன்சந்துநொந்து திகைக்கநெஞ்செரிப்புக்காணும்
குழியுமேஉச்சித்தாழிற் குணம்இஃதறிந்துசொல்லே. (சகூச)

நயனம்-கண்,

இதுவுமது.

மின்னேகேளாய்சுழிகணந்தான் மேவிசுவாசம்இருமலுண்டாம்
பொன்னேமுகமும்மார்புகண்டம் புடைத்துக்காணும்உண்மையிது
சொன்னேம்வயிறுஊசல்நெஞ்சு தொண்டைநாவுமிவைவெந்து
அன்னைமுலைப்பால்குடியாமல் அலறிஅழுகும்அறிவாயே (சகூரு)

இதுவுமது,

இருமுலைஞ்செருமும்மேல்மூச்சும் இருகைகாலும்குளிர்ந்திருக்கும்
பொருமும்வயிறுதான்ஊதும் பொல்லாச்சுரமும்மிகவுண்டாம்
அரிவைமுலையுங்குடியாது அயர்ந்துவெதும்பிஅலறியிடும்
சொருகும்கண்ணும்நாவாண்டு சுழிகணஞ்செய்யுங்குணமிதுவே, ()

இதுவுமது.

வார்முயாரோகேளீர் மண்ணில்பிறந்தபாலகர்க்கு
ஈசல்வெந்துசுழிகணமாய் இருமலுண்டாய்ஏதிரிளைப்பாய்
நாணைப்போலேஅதுதுவண்டு நாசிஇரண்டும்எடுத்தெரியும்
பாரிலுள்ளபாலகர்க்குப் பரிந்தேஇதனைப்பாரீரோ, (சகூஎ)

இதுவுமது,

மார்பிலேசுழியாய்வாங்கும் வாயினில்நுரையுங்கோழை
சேரிலேபிள்ளைவாங்கிச் செய்யுமேகழியும்காயும்
மூரியேமுகத்தில்மஞ்சள் முன்தலைமயக்கும்நோகும்
பாரினிற்பாலகர்க்கும் பரிந்துமேபார்த்திடீரே. (சகூஅ)

சுழிகணத்துக்குசஞ்சீவிஎண்ணை கட்டளைக்கலிப்பா,

பத்துக்காசெடை சண்பகப்பூவுடன் பகருஞ்சாதியின் பத்திரிக்காசெடை. முற்றுங்கேளைக்காசெடை யாவினில் மூளைத்தெழுந்த கோரோசினைமூன்றுமாய், எத்துங்கேளிவைப் பொடியாய் விளக்கெண்ணை யானதில்ஓர்படிதன்னிலேயிடு, சற்றுந்தீயிற்கொதியிட்டிறக்கியே தனையனுர்க்கிடுந் தான்விதங்கேளுமே, (சகூக)

இதுவுமது வேறு-குடிநீர்,

கேளுந்துட்டெடை இட்டிடவேசுரம் கிறுகிறென்னவே வாங்கு ஞ்சுழிகணம், சூழுநோயும் இருமலுந்தீர்ந்திடும் சுளிகணச்சஞ்சீவி இதாமென்னே, வாழும்உள்ளிவசம்பு உசிலையின் வாய்த்தப்பட்டை இம்மூன்றும்நறுக்கியே, தாழிநீரினில்ஊறி இறுத்திடு தணியுமே சுழிதன்கணம்இன்றுமே (சஎ0)

* தாழி-மிடா

சுழிகணத்துக்கு-வேறுஎண்ணை,

இண்டு * காரி * இம்பூரவின்வேர் * கடு இவைகபொடித்துழக்கெண்ணெயிலேற்றியே, மண்டுபாலுடம்வைத்தெடுத்ததை மதலையோர் சுழிமாந்தம் அறுக்கவே, கொண்டகுன்றி மணிவேர் இலுப்பைவேர் கூர்முசுக்கைத் துளசிநற் () கூவிளைக் கண்டுக்கொண்டு முன்போலே புடமிட்டுக் கலந்துண்ணச்சுழி காணுதுபாருமே. (சஎக)

* காரி-கண்டங்கத்ரி * இம்பூரல்-சாயவேர் * கடு-கடுக்காய் () கூவிளை-வில்வம்.

இதுவுமது வேறுகுடிநீர்-எண்ணை,

பாரும்சருள்ளித்துருசுடன்வந்தநீர் பாலிறக்கி இலுப்பைப் புண்ணாக்கையும், நீரிலேகரைத்தேகுழவிக்கிய நீங்கும்இருமல் இளைப்பு சுழிகணம், காரு தூது துளசிநுணாசங்கு கருதும்இண்டுப்பொடுதலைச்செம்முள்ளிச், சாரும்ஆவிரைய் சீரகசற்கமும் தணலெரித்திட சுழிகணமாறுமே. (சஎஉ)

* தூது தூதுவளை.

சுழிகணம் உப்பிசம் சோழைக்கட்டு இளைப்புக்குவேறுமருந்து

அறுசீராசிரியவிருத்தம்,

குப்பைமேனிச்சாற்றுள்உப்பைக் கூடக்கலந்துவேப்பெண்ணெய்
செப்பமாகமத்தித்து தேனேமூன்றுநாட்புகட்ட
தப்பில்லாமலேஇளைப்பு தானேசுழிகணம்உப்பிசமும்
துப்புகெஞ்சிற்சோழையுடன் துயரங்கெட்டுஓடுமென்றே. (சஎந)

சுழிகணத்துக்குவேறுஎண்ணெய்,

முலைப்பால்கடுக்காய்காட்டுமல்லி முதிர்ந்தஆலின்புல்லுருவி
இலைப்பால்இண்டுசருள்ளி இவையாமணக்கின்எண்ணையுடன்
நிலைப்பால்கருக்கெரித்ததனைச் சொன்னபடியேகொடுத்திடவே
சொலிப்பாய்வந்தசுழிகணங்கட் சொல்லாதோடிப்போய்விடுமே, ()

சுழிகணத்துக்குவேறுஎண்ணெய்.

கடுக்காய்காட்டுமல்லிகையும் கடியக்குமரிவெந்தயமும்
மிடுக்காய்சீரகம்இத்துடனே மேவுஞ்சாறணைசருள்ளி

ரூடுபோய் ஆமணக்கெண்ணெயுடன் மூடுகாகெரித்துக் கொடுப்பீரேல்
ஆடுபோய்வந்தசுழிகணைத்தான் சொல்லாதோடிப் போய்விடுமே, ௪௭௫
* ரூமரி கற்றாழை,

சுழி கணைக்கு - வேறு - நெய்,

நாடுந்துளசி* தூதுளை நல்லசங்கம் இலைகோடு
பூநும்பொடுதலைச்செம்முளிச்சாறு புறமும் ஆவின் நெய்தனிலே
சாடுக்கலில் இட்டுநன்றாய்க் காய்ச்சிக்கொடுக்கவேமாறும்
ஆடுஞ்சுழிகணைமாணமெல்லாம் ஆடிப்போகுங்கண்டாயே, (௪௭௬)
* தூதுதூதுவளை.

சுழிகணைக்கு வேறு எண்ணெய்,

நந்தியாவட்டம் வேறு நல்லநாய்த்துளசிவேறு
கந்தியாரிவேலைகவேறு காட்டுமல்லிகையின்வேரு
அந்தியபுன்னைக்காயின் அவ்வரைத்திப்பால்கேளு
சுந்திரகண்டங்கத்திரி தூதுளைசின்னியாமே, (௪௭௭)

இதுவுமது,

சின்னியுமணித்தக்காளிசெழித்தகொட்டைக்கரந்தை
கொன்னிபக்குப்பைமேனிக் கோழிப்பிசுவரைப்பத்ரம்
இன்னிவைசமனாக இடித்தப்பிழிச்சாறும்
பின்னியமாமெவ்வாத விளக்கெண்ணெய்பப்படியொன்றாமே. (௪௭௮)
* பத்ரம் - இலை

இதுவுமது,

ஒன்றதாய்க்கலந்தெரிந்து உண்மையாய்வடித்துவைத்து
துன்றியபாலகர்க்கு தூட்டெடைப்புகட்டவேதான்
சென்றிடுஞ்சுழிகணைத்தைக் குலவியதொண்டைக்கட்டு
என்றதுங்நீரும்பத்யம் இன்பமாய்க்காத்திடாயே. (௪௭௯)

சுழிகணைசுவாசகாசத்திற்கு - லேகியம்,

* சிங்கிகர்க்கடகம் சீந்தில்சீரகம்விலவோடு
உடுகதிலி டயந்தானும் உரோகணிகண்டங்காரி
பொங்குமாசக்கைமுன்னிப் புகல்தூதுவேளைத்திப்பிலி
கன்மகநீர்க்காய்ச்சிக்கொள்ளக் கனைந்த்சுழி வாசம்போமே, (௪௮௰)
* சிங்கி - கர்க்கடகசிங்கி உரோகணி - கடுகுரோகணி - கண்டங்காரி கண்டங்கத்திரி,

உண்டாஞ்சூலிக்கணக்கேறு உத்தசுவாசமேல்எழும்பி
தண்டா இருமல்மிக உண்டாம் தண்மைநெஞ்சு வாய்மட்டும்
தொண்டைநாவுமேவெந்து சோறும்பொருமிவயிறுப்பும்
வண்டார்முலையுமகுடியாது வகையாய்முகமும்வாளுமென்றே, (௪௮௧)
* சூலிக்கணம் - கர்ப்பக்கணம்.

குலிக்கணத்திற்கு எண்ணெய்,

முகமாம்எண்ணெய்கால்படிதான் முகிழ்சேர்துளசிச்சார்காலாம்
தகமாய்நிலத்தின்துளசிச்சாற் தன்மைஅரைத்தகிற்படிகூட்டு
வகமாக்கஞ்சாங்கோரையுடன் வன்மைமாசிப்பத்திரியும்
அகமாம்வில்வம்உள்ளியுடன் அன்பாய்இடித்துச்சார்பிழியே, (௪௮௨)

இதுவுமது,

அன்பாய்அரைக்கால்வகைக்குபடி அரைத்துச்சிறுக்கிஞன்றுக்கி
வன்பமந்திரிகடுகுடனேதான் வறுத்திடித்துசூரணஞ்செய்
தென்பாய்இரண்டுவிருகனெடை தேனும்வார்த்துக்கலந்துவிடு
உன்பாயெண்ணெய்அடுப்பேற்றி உருகுங்கடுகுபதந்தனிலே, (௪௮௩)

இதுவுமது,

தனிலேஇந்தக்கடைமருந்தைத் தயவாய்ப்போட்டுக்கிண்டிடுநீ
வனியேஇறக்கிக்கணபதியை வகையாய்த்தொழுது அடிவணங்கி
மணியேகுலிக்கணந்தனக்கு மைந்தன்தானைச்சாந்திசெய்து
தொனியேயமர்ந்தெண்டைதனில் தொடுநீகாசளவெடுத்தே, ()

இதுவுமது,

எடையேஐந்துமாதமென்றால் எண்ணெய்ஐந்துநாள்மட்டும்
தடையாய்இச்சாபத்தியமது தனமாய்பிராமஐந்துமட்டும்
இடையாய்இருக்கும்குலிக்கணம் இதனைக்கண்டுத்தீர்த்திடுங்காண்
படையாய்வருஷமானணம் பலிக்குமொருமண்டலங்கொள்ளே, ()

இவ்வைந்து மொருதொடர்,

மஹாகணத்தின்குணம் இதைமாக்கெணமென்பாருமுளர்,

மூகமும்புருங்காலும்கையும் மோதியேயினுமினுக்கும
கைகவிறு*வெருரிக்காட்டும் கஞ்சுகண்டால்போல்மயக்கும்
மிகமிகவெதுப்பும்உண்டாய் வெடித்துகாஉதடுபுண்ணாய்
சுகமிலாவருத்தத்தோன்றும் சொல்மஹாகணத்தின்வாமே, ()

* வெருரி-வெருப்பு

மஹாகணத்துக்குக்குடிநீர் எண்சீராசிரிய விருத்தம்,

சிறுகீரைவேர்க்காந்தி கீழ்க்காய்நெல்லிச் சிறுபூளைசுருமுட்டைச் சீந்தில்கோடை, நறுகீரையாகிலித்தனையுமொன்றாய நறுக்கியேநல்லதொருபாண்டந்தன்னில், வருகீரை இளைவருப் பாகவேதான் வறுத்ததனைக்குடிநீராய் வற்றக்காய்ச்சி, இறக்கியேவைத்திறத்துக் கொடுப்பீராகில்திருமஹாகணமென்றேஇயம்பினீர், (௪௮௭)

பிரளிகணத்தின்குணம்-எண்சீராசிரியவிருத்தம்,

மிகுத்தபிரளிகுணத்தியல்லை விரிக்கக்கேளுசெருக்குறவே
விகுத்தமாகவயிறுவிம்மி மேலேவாய்ப்பமுண்டாகும்

கசிந்துடல்புண்போல்நொந்து கடிக்குமேகனக்கியழுதலறும்
பசுந்தமலமும்மாப்போலே பரக்கக்கழியுங்கவிக்கிடுமே, (௪௮௮)

இதுவுமது - தன்வந்திரி,

போதப்பிரணிகுணங்களாய்ப் பொருமிவயிறும்அசைப்புண்டாம்
கோதாமலமும்போகாது குடலைப்புரட்டிதான்கலிக்கும்
மாதாமுலையுமுண்ணாது வலுவைக்குலைக்கும்வாயுலரும்
மீதாமேனைமூச்சண்டாகும் விழியுந்தூங்குமேமெத்தம், (௪௮௯)

இதுவுமது வெண்பா,

சித்தா இளைக்குந்திட்டித்தெட்டெனமுக்கும்
மூக்காமூக்கில்நீர் மூண்டோடுமெத்தாம்
மஞ்சட்பவா மணக்கும்மதிவதனை
வஞ்சிப்பிரணிகுணமாம், (௪௯௰)

இரண்டுமொருதொடர்

பிரணிகணத்திற்கு-எண்ணெய்-எண்சீராசிரியவிருத்தம்,

அவித்தசிற்றுமணக்கெண்ணெய்ப் படிதானொன்று அதில்சாலுகு மட்டிக்காய்அரிந்துபோட்டு, இலித்திரவெண்காயம்படியிரண்டுஇதமா கஅரிந்துபோட்டுன்னங்கேளு, கவித்தகருஞ்சீரகந்தான்பணமாகாணி கடுகுரோகணிபணம் அரைக்காலாகும், கயித்தகஸ்தூரிமஞ்சள் பண மாகாணி நறுக்கிப்போட்டுப்பேற்றிக் காய்ச்சிக்கொள்ளே. (௪௯௧)

இதுவுமது.

கொள்ளவே பதமறிந்து காண்டிவிதம் கூறுவேன் தட்டெடை தான் குடிக்கும்போது, கள்ளமிலா * விரேசனமாம் இதற்குகானே கதறிவேப பிரணிகணக்காறுநீங்கிடும், கள்ளவே வயிற்றுவலி பொருமல் வொடு சலகழிச்சல் இவைவெல்லாஞ்சாந்தமாகும், விளலேல பத்தியந் தான்பிடிக்கவேண்டும் விரும்பாதேமாங்கிஷந்தான் கிட்டாகாதே, ()

* விரேசனம்-பேதி

பிறக்கணத்தின்குணம்,

தாக்கிடுவாய்முன்போலே மூன்றுநாள்தான் தடவிவிட புண்குடு தணிந்துபோகும், தாக்கிடுமலபேதி பச்சென்றேதான் தோய்ந்ததயிர் போலவுமே வயிறுஉப்பி, தூக்கமிகும்பால் உண்ணும் கக்கும் காயும் சொருகிவிழிகால்கள் சில்லென்றேதான், ஏற்கையிலே தலைபுரட்டல்கு ணங்கட்கண்டால் இயல்பானபிறக்கணமென்றியம்பினேமே. (௪௯௨)

பிறக்கணத்திற்கு-எண்ணெ,

இயம் * பானை கோழிகுணா ஜனகிவேலையில் வெதுப்பிரட்டி புலி இடுகால் புள்ளு, சுயமாக வகையெல்லாஞ்சாறுவாங்கி குடடகி

லேளண்ணை சேர் சமனதாக, வசம் உள்ளிக் கரியமணி இருவிமூலமிவை
கைக்கழஞ்சு இடித்திட்டுத்தியையூட்டு, வயமாகமூன்றுபோல் காசெனைட
யேயாகு நாள்மூன்றில்பிறக்கணமும் நாடாதென்றே, (௨௯௪)

* ஆனை-வல்லாரை கோழி-கோழியவரை குரை-கஞ்சாங்கோரை, ஜனனி-ஜானகிபூண்டு வெதுப்பி-ஒற்றைப்பேய்மிரட்டி மிரட்டி - இரட்டைப்பேய்மிரட்டி பலி- தடசி புள்ளு-சிறுபுள்ளடி உள்ளி- வெண்காயம் கரியமணி-கருஞ்சீரகம் இருவிமூலம்-வசம்பு.

வாட்கணத்தின் குணம் - அறுசீராசிரியவிருத்தம்.

நெஞ்சு அடிக்கும் புகைந்திருமும் நிறமும்வேறோக அறக்கும்
வஞ்சம் அறவேஒருவேளை வந்தேசரீரமெலாம்வெதுப்பும்
மிஞ்சும் இருமல்வயிற்றினைச்சல்விட்டுத்திடமாய்துரும்பெடுக்கும்
மஞ்சார்குழலாய்வாட்கணத்தின் வாறுமிதனையறிவாயே (௨௯௫)

இதுவுமது,

* அத்தியில்சுரமுந்தோன்றும் அழன்றுநீர்தாகமாகும்
முற்றியேசிறுநீர்தானும் முறுக்கியேவெண்மைசாரும்
சற்றுகாண்வயிறுநொந்து சந்திருடன்கடுப்புமாகும்
வற்றிடும்சரீரமெங்கும் வாட்கணம்என்றுசொல்லே (௨௯௬)

* அத்தி-எலும்பு,

இதுவுமது.

